
# போராட்டம்

இதழ் - 23 2015 ஐப்பசி | மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு | 20 ரூபா



சமூக சந்தைப் பொருளாதாரம் உண்மையும் பொய்யும்




பக்கம் - 4

அப்படி சொல்வார்களாம் இப்படி செய்வார்களாம்



பக்கம் - 08




கொலொம்பிய ஒப்பந்தம் குபார்க் பாப்பரசர்

பக்கம் - 12

சிந்தனை முரண்பாடும் அதன் அரசியல் வெளிப்பாடும்

பக்கம் - 09




# ஆளும் குடும்பத்திற்கு எதிராக உழைக்கும் மக்களின் உடன்படிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டரசாங்கத்தின் மக்கள் துரோக நடவடிக்கைகளுக்கு எதிராக உழைக்கும் மக்கள் முதற்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றிணைந்த முன்னணியொன்றை கட்டியெழுப்ப வேண்டுமென கட்சி வலியுறுத்துகிறது.

ஆகஸ்ட 17ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. அதன் விளைவாக இரு பிரதான கட்சிகளும் இணைந்து கூட்டரசாங்கத்தை உருவாக்கியன. அந்த இரு கட்சிகளும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஆராயுமிடத்து அவை தனத்தனியாக ஆட்சி செய்தபோது செயற்படுத்திய நவ தாராளமய கொள்கையையே நடைமுறைபடுத்தப்போவது தெரிகிறது.

இணக்க அரசியல் என்ற பெயரில் செயற்படுத்தவிருக்கும் அரசியல், முதலாளித்துவ வர்க்கத்தின் அனைத்து பிரிவுகளும் சேர்ந்து பாட்டாளி வர்க்கத்தை நசுக்கும் அரசியலே என்பதை வலியுறுத்தும் கட்சி, அதற்கெதிராக அனைத்து ஒடுக்கப்பட்ட சக்திகளும் ஒரே போராட்ட நிலையத்திற்குள் அணிதிரள வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்திருக்கின்றது. அவ்வாறான பொது வேலைத்திட்டத்திற்கு தேவையான முன்னேற்பாடுகள. மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## அரசியல் பழிவாங்கல்களுக்கு எதிரான மத்தியநிலையம்

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட கையோடு தொழிலாளர் சக்திகளை இலக்கு வைத்து செயற்படுத்தப்படும் அரசியல் பழிவாங்கல் சம்பந்தமான தகவல்களை சேகரிக்கும் மற்றும் அவற்றிற்கு எதிராக நடவடிக்கையெடுக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் கூறுகிறது.

2ம் பக்க தொடர்ச்சி

## காரத்திகை வீரர் ஞாபகார்தத்திற்கான முதற்கட்ட நிகழ்ச்சிகள்

1987-89களில் நடந்த போராட்டம் அடக்கப்பட்ட,நசுக்கப்பட்ட 26 வருட நினைவுகூரல் நிகழ்வு நவம்பர் 13ம் நடைபெறவிருக்கின்றது. அதன் நிமித்தம் ஆரம்பக்கட்ட நிகழ்ச்சிகள் அக்டோபர் மாதத்திலிருந்து நடாத்த கட்சி தயாராகி வருகிறது. போராட்டத்தின் அரசியல் அநுபவங்களை கலந்துரையாடுவதன் ஊடாக அது குறித்து அரசியல் கருத்தாடலை நடத்தவும், போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த தோழர், 2ம் பக்க தொடர்ச்சி

## அரசியல் கைதிகளை விடுதலை செய்!

### சம உரிமை இயக்கம் கொழும்பில் போராட்டம்

சமவுரிமை இயக்கம் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்! பயங்கரவாத தடைச் சட்டத்தை இனியாவது நீக்கு! என்ற இரு கோரிக்கைகளை முன்னிறுத்தி மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்தியது.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக 14.10.2015 அன்று காலை 10 மணிக்கு சமவுரிமை இயக்கத்தினால் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர் பங்கேற்றதுடன் மகஜர் ஒன்றும் கையெழுத்திடப்பட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் என்று தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் அனைவரும் கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அழுத்தம் கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# அரசியற் கைதிகளின் விடுதலையும், கூட்டமைப்பு - மைத்ரி-ரணில் அரசின் வஞ்சகமும்

சமவுரிமை இயக்கம் புரட்டாதி 14 அன்று, அனைத்து அரசியற் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரியும் - பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரியும் ஆர்ப்பாட்டத்தையும் - அதைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்கும் வண்ணம் ஊர்வலத்தையும் கொழும்பில் நடத்தியது. இடதுசாரிக் கட்சிகள் உட்பட பல கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும், சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் முதல் கைதிகளின் உறவினர்கள் வரை, பலதரப்பினர் இந்தப் போராட்டத்தில் பங்குகொண்டனர். அதேநேரம் நாடுதழுவிய அளவில், அனைத்து அரசியற் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரியும் - பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரியும், சுவரொட்டிகள் சமவுரிமை இயக்கத்தால் ஒட்டப்பட்டது.

கைதிகளை விடுதலை செய்யக் கோரிய ஆர்ப்பாட்டமானது இவ்வருடத்தில்(2015) இது இரண்டாவது தடவையாகும். தேர்தலுக்கு முன்பாக கொழும்பு, பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா எனப் பல நாடுகளில் சமவுரிமை இயக்கம் போராட்டத்தை நடத்தி இருந்தது.

தமிழ் - சிங்கள மொழி பேசும் மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தைத் முன்னெடுத்த நிலையில், தொடரவிடாது தடுக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவசர அவசரமாக கைதிகள் விடையத்தில் தலையிட்டது. கூட்டமைப்பு கைதிகள் விடுதலை தொடர்பாக அரசுடன் பேசியதாகவும், கைதிகளின் விடுதலை புதிய அரசு பதவிக்கு வந்தவுடன் நடக்கப் போவதாகவும் அறிக்கை வெளியிட்டது. இதன் மூலம் கைதிகளின் உறவினர்கள் இனி போராட வேண்டியது அவசியமில்லை என்றும் மறைமுகமாக கூறியது. கைதிகளையும், கைதிகளின் உறவினரையும் ஏமாற்றி, சமவுரிமை இயக்கத்துடன் அவர்கள் இணைந்து முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்த போராட்டங்களை முடக்கியது.

தேர்தல் காலத்தில் கைதிகள் சார்பான போராட்டம் தொடர்ந்து நடப்பதன் மூலம் தங்கள் அரசியற் போலித்தனம் அம்பலமாவதைத் தடுத்து நிறுத்தியது. கூட்டமைப்பின் திட்டத்துக்கு ஏற்றார் போல மைத்ரி -ரணில் அரசும் கைதிகள் சிலர் இருப்பதாகவும், அவர்கள் மிக விரைவில் விடுவிக்கப்படப் போவதாகவும் அறிக்கை வெளியிட்டது. இந்த அரசியற் சித்துவேலைகள் மூலம், ரணில் -மைத்ரி அரசின் பின் வாசல் கூட்டாளியான கூட்டமைப்பு, மக்களை ஏமாற்றி வாக்குவேட்டையை நடத்தியது.

இது ஒரு புறமிருக்க, இலங்கை ஆளும் வர்க்கமோ அல்லது தமிழ்- சிங்கள ஆளும் வர்க்கமோ எந்தக் காலத்திலும் இனங்களுக்கு இடையிலான நல்லுறவை விரும்பியவர்கள் அல்ல. இன முரண்பாடுகள் எப்போ முடிவுக்கு வருகின்றதோ அப்போதே தமது அரசியல் இருப்பு ஆட்டங் கண்டு விடுமென்று அவர்களுக்குத் தெரியும். இந்நிலையில், தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் இணைத்து தமது உரிமைகளுக்காப் போராடுவதை கூட்டமைப்பும், மைத்ரி-ரணில் அரசும் எவ்வாறு பார்த்துக் கொண்டு சும்மாயிருக்குமா?

இப்படியாக, ஆளும் வர்க்கத்தின் சுயநலனுக்காக அனைத்து இன மக்களும் இணைந்து அரசியற் கைதிகளின் விடுதலைக்கான போராட்டம் தடுக்கப்பட்டது.

தேர்தல் திருவிழாவும் முடிந்து விட்டது. பதவிகள் பகிர்ந்து கொள்ளப்பட்டு விட்டது. ஆனாலும் இன்றுவரை எந்த அரசியற் கைதியும் விடுதலை செய்யப்படவில்லை. «நல்லாட்சp» அரசு என்று தன்னை சுய விளம்பரப்படுத்தும் மைத்ரி-ரணில் அரசும், எதிர்கட்சி தலைமைப் பதவியை சுவீகரித்த கூட்டமைப்பும் அரசியற் கைதிகளின் விடுதலையைப் பற்றி மூச்சுக்கூட விடுவதாயில்லை.

ஆனாலும், மேற்படி சமவுரிமை இயக்கத்தின் போராட்டம் புரட்டாதி 14 அன்று கொழும்பில் நடந்தேறிய பின்பு, பயங்கரவாதச் தடைச் சட்டம் நீக்கப்பட்டால் தான் அரசியற் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க முடியும் என கூட்டமைப்பின் தலைவர்களில் சிலர், ஊடகங்களுக்கு கூறி வருகின்றனர். அவர்களின் கருத்துப்படி தற்போது தாங்கள் பயங்கரவாதச் தடைச் சட்டத்தை நீக்க வேலை செய்வதாகவும், அதன் பின்பு கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவிக்கின்றனர்.

**அதேவேளை, «எங்கப்பன் குதிருக்குள் இல்லை» என்பது போல, மைத்ரி -ரணில் அரசானது அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்றும், தாம் பயங்கரவாதிகளையே தடுத்து வைத்திருப்பதாகவும் அறிக்கை விட்டு இருக்கின்றது. இங்கு அரசும், கூட்டமைப்பும் ஒருவரை ஒருவர் பாதுகாக்க அரசியல் செய்வது தெளிவாகவே தெரிகின்றது**









அதேவேளை, «எங்கப்பன் குதிருக்குள் இல்லை» என்பது போல, மைத்ரி -ரணில் அரசானது அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்றும், தாம் பயங்கரவாதிகளையே தடுத்து வைத்திருப்பதாகவும் அறிக்கை விட்டு இருக்கின்றது. இங்கு அரசும், கூட்டமைப்பும் ஒருவரை ஒருவர் பாதுகாக்க அரசியல் செய்வது தெளிவாகவே தெரிகின்றது

இலங்கையில் நடந்து முடிந்த கொடூர யுத்தத்தின் பின் 12000 போராளிகள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களைப் போலவே அரசுக்கு எதிராக போராடியவர்களும், எந்தக் குற்றமும் செய்யாமல் கைது செய்யப்பட்டோருமே இன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த வகையில் தற்போது சிறையிலுள்ள அரசியற் கைதிகளை, அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களை அரசியல் கைதியாக அங்கீகரிக்க மறுப்பதென்பது, இலங்கையில் இனமுரண்பாடு என்ற ஒன்று இருக்கவில்லை என்று மறுப்பதாகும். இதன் மூலம் அரசியல் கைதிகளை குற்றவாளிகளாக- பயங்கரவாதிகளாக மாற்றும் சதியே நிகழ்கிறது. இதற்கு எதிராகப் போராடாமல், கூட்டமைப்பும் அரசின் ஜதிக்கேற்ப அரசியல் நடனமாடுகிறது.

கூட்டமைப்பு, அரசுடன் சேர்ந்து நடத்துகின்ற அமெரிக்க மற்றும் மேற்குலக ஏகாதிபத்திய சார்பு இணக்க அரசியல் என்பது, மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கல்ல. மாறாக அவர்களை ஏமாற்றி வாக்குப் பெறுவதும் - தம்மால் மட்டும் தான் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்று கூறி, மக்களைத் தமது சொந்த விடுதலைக்கான போராட்டத்தில் இருந்து விலக்கி வைப்பதும் தான் நடைபெறுகிறது. கூட்டமைப்பையும், மைத்ரி - ரணில் அரசையும் நம்பி ஏமாறாது மீண்டும் கிளர்ந்துள்ள அரசியற் கைதிகளின் விடுதலைக்கான போராட்டமானது, இம்முறை ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் விடுதலை என்ற உச்சபட்ச இலக்கை அடையும் வரை தொடர வேண்டும்.

---

1ம் பக்க தொடர்ச்சி

## அரசியல் பழிவாங்கல்களுக்கு---

விஷேடமாக அரச நிறுவனங்களில் அரசியல் பழிவாங்கல்கள் நடப்பதுடன் துறைமுக அதிகார சபை, இலங்கை போக்குவரத்து சபை போன்ற நிறுவனங்களில் இந்நிலைமை மோசமாக உள்ளது.

அவ்வாறான பழிவாங்கல்களுக்கு ஆளாகிய ஊழியர்கள் இருப்பின் cworkersstrugglesl@gmail.com ஈ மெயிலுக்கு அல்லது 0714429290 என்ற இலக்கத்தில் தோழர் சமீர கொஸ்வத்தவிடம் முறையிடுமாறு தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் கேட்டுக் கொள்கிறது. தற்போது கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் பலிவாங்கல்களுக்கு ஆளாகிய நபர்களுக்கு நீதி கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் கூறுகிறது.

## காரத்திகை வீரர்

தோழர் தோழியரை நினைவுகூரவும் மற்றும் அவர்களது குடும்பத்துடன் சம்பந்தப்பட்டு நிகழ்ச்சிகளை நடத்தவும் திட்டமொன்று இருப்பதாக மு.சோ.கட்சி கூறுகிறது. அதனூடிணைந்த பல நிகழ்ச்சித்திட்டங்கள் நாடுபூராவும் நடைபெறவிருக்கின்றது.
கார்த்திகை வீரர்கள் சம்பந்தமான பிரதான நினைவுகூரல் நிகழ்ச்சி நவம்பர் 13ம் திகதி கொழும்பில் நநடைபெறவிருக்கின்றது.



படிப்பகம்

# ஏமாற்றும் தேர்தல் முடிந்து விட்டது மக்கள் பிரச்சனைகள் அப்படியே?



அவ்வாறான “குடும்பப்” பொருளாதாரக் கொள்கையால் நவதாராளமயத்தை முன்னெடுக்கும் ஏஜண்டுகளாக இருப்பதுவும் - ஆளும் வர்க்கத்திற்காக சேவை செய்வதுமே தங்கள் அரசியல் வாழ்வாக - நடத்தையாக முன்னெடுக்கின்றனர். இந்தப் பாராளுமன்ற “குடும்ப” உறுப்பினர்கள் தங்கள் இனத்தைப் பாதுகாப்பதாக கூறிச் சொன்ன இனவாதக் கோசங்களும் - அதற்கான தீர்வுகளும் போலியானதும் - மக்களை ஏமாற்றுவதற்கானதே என்பதும் வெளிப்படையான பொது உண்மையாகி இருக்கின்றது.

ஜனநாயகத்தின் பெயரில் சடங்காகவும் சம்பிரதாயமாகவும் நடக்கின்ற தேர்தலாகவும் - அதற்கு பழக்கப்பட்டு வாக்களிக்கும் மக்களுமாக இருப்பது என்பது தேர்தல் முறையாகிவிட்டது. தேர்தல்முறை மூலமும், வாக்களிப்பதன் ஊடாகவும் தெரிவுசெய்யப்படும் “மக்கள் பிரதிநிதிகள்” சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் மக்கள் வாக்களிக்கின்றனர். ஆனால் தேர்தலில் வென்றவர்கள் தனிப்பட்ட செல்வத்தை குவிப்பதற்கும், அதற்காக பதவிகளையும் அதிகாரங்களையும் பெறுவதும் இதன் மூலம் நாட்டையும் மக்களையும் விற்பதுமாக பாராளுமன்றம் இன்று இயங்குகின்றது.

தேர்தல் முடிந்தவுடன் தங்கள் பிரச்சனைகளை பாராளுமன்றமும் - தாங்கள் தெரிவு செய்த ”மக்கள் பிரதிநிதிகளும்” தீர்க்க மாட்டார்கள் என்ற பகுத்தறிவும் - அனுபவமும் கிடைக்கின்றது. தேர்தல்முறை மூலம் மாறி வரும் ஆட்சிமாற்றங்கள், இதைத்தான் பறைசாற்றுகின்றது. இதனால் எங்களை ஏமாற்றும் தேர்தல் முடிந்துவிட்டது என்று உண்மையை உணர்ந்து குவிந்து கிடக்கும் எங்கள் பிரச்சனைக்காக போராடப் போகின்றோமா அல்லது அடுத்த ஏமாற்றும் தேர்தல் வரை வாக்களிக்க காத்திருக்கப் போகின்றோமா என்ற கேள்வியை எழுப்புகின்றோம். வாழ்வதற்காக நாங்கள் போராடுவதைத் தவிர, வேறு வழி எமக்கு முன் கிடையாது.

## இனரீதியான தேர்தல் கோசங்கள் மக்களை ஏமாற்றுவதற்கே

இனரீதியான தேர்தல் கோசங்கள் மூலம் தங்கள் இன மக்களை பாதுகாக்கவும் - முன்னேற்றவும் என்பதற்காக தமக்கு வாக்களிக்கவே இனவாதிகள் கோரினர். சிங்கள - தமிழ் - மலையகம் - முஸ்லிம் என்று இனரீதியாக தங்களை அடையாளப்படுத்தி வாக்குக்கேட்டு வென்றவர்கள் அனைவரும் தேசிய அரசாங்கத்துக்குள்ளும் - அரசு ஆதரவு பெற்ற எதிர்க்கட்சி அதிகாரங்களுமாக, இன்று ஒரே போர்வைக்குள் கணவன் மனைவியாகி ஒரு குடும்பமாக மாறி இருக்கின்றனர்.

அவ்வாறான “குடும்பப்” பொருளாதாரக் கொள்கையால் நவதாராளமயத்தை முன்னெடுக்கும் ஏஜண்டுகளாக இருப்பதுவும் - ஆளும் வர்க்கத்திற்காக சேவை செய்வதுமே தங்கள் அரசியல் வாழ்வியலாக - நடத்தையாக முன்னெடுக்கின்றனர். இந்தப் பாராளுமன்ற “குடும்ப” உறுப்பினர்கள் தங்கள் இனத்தைப் பாதுகாப்பதாக கூறிச் சொன்ன இனவாதக் கோசங்களும் - அதற்கான தீர்வுகளும் போலியானதும் - மக்களை ஏமாற்றுவதற்கானதே என்பதும் வெளிப்படையான பொது உண்மையாகி இருக்கின்றது.

## இன மொழி கடந்த தேசிய அரசாங்கம் என்னும் மாயை

தேர்தலைத் தொடர்ந்து இன - மொழி - சாதி - மதம் கடந்த தேசிய அரசாங்கத்தை உருவாக்கியதன் மூலம் - சமூகப் பிரச்சனைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் - தீர்க்கவும் முடியும் என்ற பொது மாயையை உருவாக்கி வருகின்றனர். இதன் மூலம் மக்களை அரசியல் அனாதைகளாக்கி வருகின்றனர். வர்க்க - சமூகப் பிரச்சனைகள் அப்படியே அரசியல் ரீதியாக கைவிடப்பட்டு இருக்கின்றது.

வேடிக்கை என்னவென்றால் தேர்தல் காலத்தில் கோசங்களையும் முரண்பாடுகளையும் செயற்கையாக உருவாக்கி - இறுதியில் இனரீதியாக மக்களை வாக்களிக்க வைத்து வெற்றிபெற்றதன் மூலம், மக்களை நட்டாற்றில் கைவிட்டு இருக்கின்றனர். தேர்தல் அரசியல் என்பதும் - அதன் கோசங்களும் மக்களை ஏமாற்றுவதாய் இருக்கும் அதேநேரம் மக்கள் பிரச்சனைகளோ இந்தத் தேர்தல் அரசியலுக்கு வெளியில் குவிந்து கிடக்கின்றது.

தேர்தல் கோசத்துக்கும், வாக்களிப்புக்கும் முரணாகவே தேர்தலுக்கு முன்னும் பின்னும் சிங்கள - தமிழ் மொழி பேசும் மக்கள் மொழிபேதமின்றி ஒன்றாக தங்கள் வாழ்க்கை சார்ந்த பொருளாதார உறவுக்குள் ஐக்கியப்பட்டு வாழ்வதும் - அதுவே இன்று நடைமுறை எதார்த்தமாகவும் இருக்கின்றது.

இதற்கு முரணாகவே இனரீதியான கோசங்களை முன்வைத்து - இனரீதியாக மக்களை வாக்களிக்க வைத்து, மக்களை ஏமாற்றும் தேர்தல் மூலம் வென்றவர்கள் - இனபேதமின்றி இன்று ஒரே தேசிய அரசாங்கமாக ஒன்றுபட்டு இருக்கின்றனர்.

இங்கு மக்களும் சரி - இனரீதியாக மக்களை வாக்களிக்க வைத்து தேர்தலில் வென்றவர்களும் சரி, இனரீதியான முரண்பாட்டுடன் நடைமுறையில் வாழ்வதில்லை என்பதே பொது உண்மையாகும். இது தான் இன்றைய பொது எதார்த்தமாகும்.

2009 க்கு முந்தைய யுத்தகாலத்திலான இராணுவ கெடுபிடிகளும் ஒடுக்குமுறைகளும் - 2009 பின் யுத்தம் முடிவுற்ற பின்னரான இராணுவ ஆட்சியும் அதன் தலைமையிலான சிவில் நிர்வாக ஆட்சியும் இன்று முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, முற்றாக சிவில் ஆட்சி அமைப்பு முறைமை உருவாகி வருகின்றது.

இனரீதியான கடந்தகால இராணுவத் தலையீடுகள் அருகிவரும் பொதுச் சூழலில் - இயல்பு வாழ்க்கையில் இனரீதியான முரண்பாடுகள் இருப்பதில்லை. அரசியல் வாதிகளும் - ஊடகவாதிகளும், இனரீதியான முரண்பாட்டைத் தூண்ட வக்கிரம் கொட்டும் இனவெறி செய்திகள் இன்றி - மக்களை தொடர்ந்து பிரித்து வைத்திருக்க முடிவதில்லை.

மக்கள் இனம் - மொழி கடந்த பொருளாதார வாழ்வில் ஒன்றுகலக்கும் போக்கு என்பது இன்றைய எதார்த்தமாகி வருகின்றது. பரஸ்பரம் மொழியைக் கற்பதில் தொடங்கி - வாழ்வின் அனைத்து மட்டத்திலும் இணைவு என்பதே முதன்மையான எதார்த்தமாகும். யாரும் சிங்களவன் - தமிழன் என்று பிரிந்து நின்று, தங்கள் வாழ்வை தனிமைப்படுத்தி அணுகுவதும் வாழ்வதும் கிடையாது.

## மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் என்ன?

மக்கள் சந்திக்கின்ற உடனடிப் பிரச்சனை என்பது இனவொடுக்குமுறையோ - இனப்பிரச்சனைக்கான தீர்வோ அல்ல. இப்படிச் சிந்திக்கின்ற - உணர்வுபூர்வமாக உணர்ந்து செயற்படுகின்ற மக்களின் வாழ்வியல் நடைமுறையோ - அரசியல் நடைமுறையோ கிடையாது.

குறிப்பாக இன்று தமிழ்மொழி பேசுகின்ற தமிழனை எடுத்தால், தமிழனைத் தமிழன் ஆள்வதோ - அதற்கு ஒரு தீர்வு வேண்டும் என்பதோ மக்களின் இன்றைய பிரச்சனையில்லை. எதார்த்தத்தில் தமிழனைத் தமிழன் ஆளும் மாகாணசபைகளும் - நகரசபைகளும் - கிராமிய சபைகளும் - பாராளுமன்ற பிரதிநிதிகளும் - அரசு அதிகாரிகளும் காணப்படுகின்றன. அனைவரும் தமிழராக இருப்பதும் - தமிழனைத் தமிழன் ஒடுக்குவதுமே நடக்கின்றது.

மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சனைகளுக்கும் - மக்களுக்கு இடையிலான பிரச்சனைகளின் போதும் இவர்களே எதிரணியாகவும் - முரண்பாடு கொண்டவராகவும் இருக்கின்றனர். மக்களை அடக்கியாளும் அரசு இயந்திரத்தின் அதிகாரத்தின் ஒரு உறுப்பாகவும் - சமூக ஒடுக்குமுறைகளின் (சுரண்டல் - சாதி - மதம் - பிரதேசவாதம்) பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனர்.

யுத்தகாலத்தில் காணப்பட்ட பேரினவாத அரசின் நேரடியான இராணுவ ஒடுக்குமுறை வடிவம் அகன்று - தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே மக்களை ஆளுகின்றவர்களாக - அவர்களே ஒடுக்குகின்றவராக இருக்கின்றனர்.

மக்களின் இன்றைய முதன்மையான பிரச்சனைகள் என்பது, தங்களைச் சுற்றிய வாழ்க்கை முறைக்குள்யேயான முரண்பாடாக மாறியிருக்கின்றது. இந்தவகையில் மக்களின் உழைப்புக்கு கிடைக்கும் மரியாதை தொடர்பானதாக - கிடைக்கும் கூலி தொடர்பானதாக - தங்கள் உழைப்பு சுரண்டலுக்கு உள்ளாகும் விதம் தொடர்பாக - பொருளை நுகர முடியாத வறுமை பற்றியதாக - தங்கள் குழந்தையின் (கல்வி,பாதுகாப்பு) எதிர்காலம் பற்றியதாக - சுற்றுச்சூழல் (உதாரணமாக எடுத்தால் குடிநீர்) பற்றியதாக - இலஞ்சம் கொடுக்காமல் வாழ முடியாத வாழ்க்கைமுறை தொடர்பாக - செல்வாக்கும் மற்றவர் தயவுமின்றி
திறமையைக் கொண்டு வாழமுடியாத நிலை தொடர்பாக - ஊரையே இரண்டாக்கி கொட்டமடிக்கும் ஊழல்கள் தொடர்பாக - அதிகாரம் மற்றும் பணம் கொண்டோர் தங்கள் வாழ்வின் மீதான தலையீடுகள் தொடர்பாக

சாதிய அவமானங்களும் சமூகக் கொடுமைகளும் தொடர்பாக - மதம் சார்ந்த அத்துமீறல்களும் சமூக ஆதிக்கம் மீதான அடாவடித்தனங்கள் மீதானதாக என மனித வாழ்வு சார்ந்த பிரச்சனைகளே இன்று அன்றாட வாழ்வியல் பிரச்சனைகளாக மாறியிருக்கின்றது.

முன்பு போல் யுத்தம் - இராணுவம் - புலி - தேசியம் என்று சமூகத்தின் பிற முரண்பாடுகளையும் அவலங்களையும் மூடிமறைக்கவோ - வேறு ஒன்றை முதன்மைப்படுத்தியோ காட்ட முடிவதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருவிதமான பிரச்சனைகள். உழைக்கும் மற்றும் சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக, உழையாத மற்றும் மேலாதிக்க சக்திகள் இன்று மூடிமறைக்கவும் - ஒடுக்கவும், ஒவ்வொரு கிராமத்திலும் சாதியத்தைத் தூண்டி விடுகின்றனர். மதத்தை முன்னிறுத்தி மோதல்களை திணித்து - கோயில்களையும் கட்டுவதன் மூலம் மக்களைப் பிரிப்பதும் - ஊழலை செய்வதும் நடந்தேறுகின்றது. அரசின் நவதாராளவாத வீதிகளையும் அதன் வளர்ச்சியையும் நாட்டினதும் பொருளாதாரத்தினதும் அபிவிருத்தியாகக் காட்டி மக்களை ஏமாற்ற முனைகின்றனர். இப்படி ... பற்பல வேஷங்கள் - கோசங்கள் மூலம், மக்களை மோதவைத்து - பிரித்தாள முனைகின்றனர்.

மக்களை மந்தைகளாக - தங்கள் பிரச்சனைகளில் இருந்து விடுபட முடியாதவராக வைத்திருக்க கையாளும் சாதி - மதம் - அபிவிருத்தி என்ற போலியானதும் - அதன் ஊழல் வடிவங்கள் மீது தலையிடுவதும் - அதன் அடிப்படையில் மக்களை கிராமங்களில் இருந்து அணிதிரட்டுவதன் மூலம் ஆதிக்க சக்திகளை தனிமைப்படுத்தி மக்கள் சக்தியை முன்னுக்கு கொண்டுவர முடியும். இந்த தேர்தல் உணர்த்துவதும் இதைத்தான்.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

# சமூக சந்தைப் பொருளாதாரம் உண்மையும் பொய்யும்

60 மாதத்தில் புதிய நாடு – பஞ்சவித செயற்பாடு” என்ற பெயரிலான கொள்கை விளக்கமொன்றை கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டது தமது பொருளாதார பார்வையை ஐக்கிய தேசியக் கட்சி கீழ் வருமாறு அதன் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளது.

**'எமது பொருளாதாரத் திட்டம் அறிவை அடிப்படையாகக் கொண்ட போட்டி ரீதியிலான சமூக பொருளாதாரமாகும். இது இடதுசாரிய பொருளாதாரத்தையும், முதலாளித்துவ பொருளாதாரத்தையும் விட முன்னேறிய மனிதநேய பொருளாதாரமாகும்.'**

இந்தக் குறிப்பு சமூக சந்தைப் பொருளாதாரம் என அவர்கள் கருதுவதை தெளிவுபடுத்துகின்றது.


**'போட்டி ரீதியிலான சந்தைப் பொருளாதாரம், அரசாங்கத்தின் முழு கட்டுப்பாட்டின் கீழ் நடைமுறைபடுத்தப்பட்டு மக்களுக்கு நியாயமான சமூக நன்மைகள் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. சமூகத்தில் நிர்க்கதியாக்கப்பட்டோர், முதியோர் மற்றும் வேலையற்றவர்களுக்கு நலன்புரி உதவிகள், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் விஷேட கவனம் ஆகியன சமூக சந்தை பொருளாதாரத்திற்கே உரிய பண்புகளாகும்'.**

சமூக சந்தை பொருளாதாரம் தொடர்பிலான உலகின் பிரபலமான விளக்கத்தையே ஐக்கிய தேசியக் கட்சி இங்கு முன்வைக்கின்றது. சமூக சந்தை பொருளாதாரமானது சந்தைப் பொருளாதாரத்தையும், சமூக பாதுகாப்பிற்கு நன்மையக்கும் சமூகக் கொள்கையையும் ஒன்றிணைப்பதாகும். அதனை திட்டமிட்டது லெசே–பயரே வகையை சேர்ந்த தாராண்மை பொருளாதாரத்திற்கும் சோஷலிஸ பொருளாதாரத்திற்கும் இடையில் அமைந்துள்ள “மூன்றாவது பொருளாதாரப் பாதை” என்பதாக அந்த கோட்பாட்டின் நிர்மாணகர்த்தாக்கள் கூறுகின்றனர். சர்வதேச மட்டத்தில் எப்படியான அர்த்தங்கள் இருந்தாலும், இலங்கையில் அப்பெயரில் செயற்படுத்த தயாராவது நவதாராளமய பொருளாதாரக் கொள்கையே என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை வெளியீட்டின் முதல் பக்கத்திலுள்ள அறிமுகம் என்ற பகுதியின் கடைசி வார்த்தைகளிலிருந்து தெரிகிறது. அதில் இவ்வாறு காணப்படுகிறது.

**'உத்தேச சமூக சந்தை பொருளாதாரமானது திறந்த பொருளாதாரத்தின் அடிப்படையை விரிவாக்குதல் அல்லது பொருளாதார ஜனநாயகம் என்பதையே வலியுறுத்துகிறது '.**

இந்தப் பொருளாதார ஜனநாயகம் என்பது தாம் உற்பத்தி செய்யும் பொருளாதார ரீதியிலான பெறுமானங்களில் நியாயமான பங்கை பெறுவதற்கான உரிமைக்கு அல்ல, உலக மூலதனம் தான் விரும்பியவாறு சுரண்டிக்கொண்டு விரிவடைவதற்கான உரிமையென்பதை அந்தக் கொள்கை வெளியீட்டின் எஞ்சிய பகுதியை வாசிக்கும்போது தெரியவருகிறது. எப்படியிருந்தாலும், சமூக சந்தைப் பொருளாதாரம் குறித்து கோட்பாட்டையும், உலகில் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பது தொடர்பிலான வரலாற்றையும் ஆராய்ந்து பார்ப்போம்.

சோஷலிஸத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் மத்தியில் மூன்றாவது பாதை உள்ளதா என்பது குறித்து ஆராய்ந்த வரலாற்றின் மிக முக்கிய இடம் ஜெர்மனிக்கே கிடைக்கிறது. சமூக சந்தைப் பொருளாதாரம் குறித்த கோட்பாட்டை போன்றே அதனை பரீட்சித்துப் பார்த்த முதல் உதாரணம் ஜெர்மனியிலிருந்தே எமக்கு கிடைக்கிறது. சமூக சந்தைப் பொருளாதாரம் என்ற பெயரிலேயே இந்தக் கருத்து வெளிச்சத்திற்கு வருவது இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்பாக இருந்தாலும் அதன் வரலாறு வெகுதூரம் பின்னோக்கிச் செல்கிறது. 19ம் நூற்றாண்டின் கடைசிப் பாதிவரை செல்கிறது. மார்க்ஸ் முன்வைத்த புரட்சிகர சோஷலிஸ மாற்றீடுக்கு எதிராக முதலாளித்துவம் அப்படியே தொடர தொழிலாளியின் வாழ்க்கைமுறையை சிறந்ததாக்குவதற்கு எடுத்த முயற்சியின் பிரதிபலனாக இந்தக் கருத்து ஜெர்மனியில் முதன்முதலில் உருவாகியது. மார்க்ஸ ின் கருத்து தொழிலாளர்கள் மத்தியில் பிரபலமடைந்ததும், கம்யூனிஸ பிரகடனம் தொழிலாளர் வர்க்கத்தின் பைபிளாக ஆனதுடன் சமூகத்தில் பெரும்பாலானவர்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய புதிய பொருளாதாரக் கொள்கையொன்று ஜெர்மனிய ஆட்சியாளர்களுக்கு தேவைப்பட்டது. அது நலன்புரிவாதமாக இருப்பது கட்டாயமாக இருந்தது. எனவே, ஜோன் மெனாட்




கேன்ஸ் தனது கேன்ஸிய பொருளாதார மாதிரியை அறிமுகம் செய்வதற்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் 1880 தசாப்பதத்தில், ஒட்டோ வொன் பிஸ்மார்க்கின் ஆட்சிக்காலத்தில் ஜெர்மன் உலகில் விசாலமான நலன்புரியுடன் கூடிய முதலாளித்துவ ராச்சியத்தை நிறுவியது. உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக தலையிடுவதற்கு அரச பொருளாதாரத்தில் நெருக்கமாக தலையிடுதல் இந்த பொருளாதார கொள்கையின் முதற் கட்டமாகும். தனது கோட்பாடு குறித்து ஒட்டோ வொன் பிஸ்மார்க் 1884ல் இப்படியானதோர் கருத்தை வெளியிட்டார்.

**'தொழிலாளர்களுக்கு இருக்கும் பெரிய மனக்குறையானது தமது இருப்பு சம்பந்தமான பாதுகாப்பற்ற தன்மையாகும். தமக்கு எப்போதும் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை கிடையாது. தமது சுகாதார நிலை நன்றாக உள்ளதா என்ற நம்பிக்கையும் கிடையாது. ஒருநாள் முதுமையடைந்து தன்னால் வேலை செய்யமுடியாத நிலை ஏற்படும் என்பதை அவன் முன்கூட்டியே அறிவான். அவன் வறுமையில் வீழும் பட்சத்தில், சுகப்படுத்த முடியாத நோய்க்கு பலியானால் அதிலிருந்து மீள முடியாமல் முழுமையாக நிர்க்கதியாவதும் அவனுக்கு தெரியும். அவன் தனது வாழ்நாளில் எவ்வளவுதான் சுறுசுறுப்பாகவும் நேர்மையாகவும் வேலை செய்தாலும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு சாதாரண ஏழைக்கு சமூகத்தில் கிடைக்கும் சொச்சக் கவனிப்பே கிடைக்கும் என்பதையும் அவன் அறிவான். எவ்வளவுதான் பாதுகாப்பு இருந்தாலும், கிராமங்களில் போன்று பாரிய நகரங்களில் கிடைக்காது என்பதும் அவனுக்கு தெரியும்'.**

இவ்வாறு பிரச்சினையை திறனாய்வு செய்த பிஸ்மார்க், தொழிலாளர் வர்க்கத்தை தனக்கு சார்பாக வைத்திருப்பதற்கும், உற்பத்திச் செயற்பாட்டின் உற்பத்தி திறனையும் வினைத்திறனையும் உயர்த்தவும் பாரிய நலன்புரிகளை முதலாம் நய்சர் வில்ஹெல்ம் அரசருக்கு அறிமுகப்படுத்தினார். தொழிலாளர்களுக்கு சிறப்பு சுகாதாரச் சேவை, பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி, வேலை செய்யும்போது ஏற்படும் நோய்கள் மற்றும் அங்கவீனம் போன்றவற்றிற்கான காப்புறுதி முறை, திடீர் விபத்துக்களுக்கானால் காப்புறுதி, வயது முதிர்ந்த பின்னர் ஓய்வூதிய முறை ஆகியவற்றை அறிமுகப்படுத்தினார். இது பின்னர் காலனித்துவ நாடுகளிலிருந்து சுரண்டப்படும் செல்வத்தை பயன்படுத்தி ஐரோப்பாவை கட்டியெழுப்பிய நலன்புரி முதலாளித்துவத்தின் ஆரம்ப எடுத்துக்காட்டை ஜெர்மனி வழங்கியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜெர்மன் மற்றும் ஆஸ்திரியாவில் சமூக சந்தைப் பொருளாதாரம் என்ற பெயர் 1948க்குப் பின்னரான காலகட்டத்தில் பயனீட்டுக்கு வந்தது.

ஜெர்மனியை, கிழக்கு ஜெர்மனி மற்றும் மேற்கு ஜெர்மனி என இரண்டாகப் பிரித்து பர்லின் சுவர் கட்டப்பட்டதோடு இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்தது. அமெரிக்கப் படைகள் நுழைந்த மேற்குப் பகுதியில் முதலாளித்துவமும், சோவியத் படைகள் நுழைந்த கிழக்குப் பகுதியில் சோஷலிஸமும் பிரகடனப்படுத்தப்பட்டன. சமூக சந்தைப் பொருளாதாரம் சம்பந்தமான உரையாடல்கள் மேற்கு ஜெர்மனியில் தொடங்கியது. மேற்கு ஜெர்மனியில் இடதுசாரிய கட்சி என்ற வகையில் சமூக ஜனநாயகக் கட்சி பலம் பொருந்தியதாக இருந்தது. அவர்கள் சோஷலிஸ கொள்கையிலிருந்து விலக மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு பலியானபோதிலும், அவர்கள் முன்வைத்த சில கொள்கைகள் முதலாளித்துவ தலைவர்களினால் கூட பின்பற்ற முடியாத கஷ்டமான மறுசீரமைப்புகளாகும். ஆகவேதான், ஜெர்மனியின் மேற்குப் பகுதியில் சமூக ஜனநாயகக் கட்சிக்கு குறிப்பிட்டளவு மக்கள் செல்வாக்கு இருந்தது. இந்த மக்களை தமது பக்கம் திருப்பிக் கொள்வதற்கவே வலதுசாரிகள் இந்த சமூக சந்தைப் பொருளாதாரத்தை முன்வைத்தனர். யுத்தத்திற்குப் பின்னர் நடந்த முதலாவது நாடாளுமன்ற தேர்தல் 1949 ஆகஸ்ட் 14ம் திகதி நடைபெறவிருந்தது. ஜெர்மனியில் இரு பிரதான வலதுசாரிய கட்சிகள் இருந்தன. அவை, கிறித்துவ ஜனநாயகக் கட்சி மற்றும் கிறித்து சோஷலிஸக் கட்சி. அமெரிக்கப் படைகள் மற்றும் பிரித்தானிய படைகள் கைப்பற்றிய ஜெர்மனியின் பிரதேசங்களின் பொருளாதார கவுன்சிலின் தலைவராக லுத்விக் எர்ஹாட் 1948 மார்ச் 2ம் திகதி பொறுப்பேற்றதன் பின்னர் சமூக சந்தைப் பொருளாதாரம் குறித்து பேச்சுக்கள் அரங்கிற்கு வந்தன. அவர் சமூக சந்தை பொருளாதாரம் தொடர்பிலான கோட்பாட்டை முதலாவதாக முன்வைத்து 1948 ஏப்ரல் 21ம் திகதி அதனை தற்காலிக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி 1948 ஆகஸ்ட் 28ம் திகதி நடத்திய கட்சி மாநாட்டின்போது தனது பொருளாதாரக் கொள்கையாக சமூக சந்தை பொருளாதாரத்தை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டது. 1949 மே மாதம் நடந்த கட்சி மாநாட்டில் கிறிஸ்தவ சோஷலிஸக் கட்சியும் தனது பொருளாதாரக் கொள்கையாக சமூக சந்தை பொருளாதாரத்தை உத்தியோக ரீதியில் ஏற்றுக் கொண்டது. பின்னர் இந்த இரு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட தீர்மானித்தன.

1949 ஆகஸ்ட் 14ம் திகதி தேர்தல் நடந்தது. 25 மில்லியன் வாக்காளர்கள், அதாவது, ஒட்டுமொத்த வாக்காளர்களில் 78.5 வீதம் பேர் வாக்களித்திருந்தனர். கடுமையான போட்டிக்கு மத்தியில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, மற்றும் கிறிஸ்தவ சோஷலிஸக்கட்சி கூட்டணி 31 விகித வாக்குகளை பெற்று 139 ஆசனங்களை கைப்பற்றியது. இடதுசாரிய சமூக ஜனநாயகக் கட்சி 29.2 விகித வாக்குகளை பெற்று 131 ஆசனங்களை கைப்பற்றியது. அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பெரும்பான்மை பலம் எவருக்கும் கிடைக்கவில்லை. ஆகவே, 11.9 விகித வாக்குகளை பெற்று 52 ஆசனங்களை பெற்றிருந்த லிபரல்தாராண்மைக் கருத்துடைய சுதந்திர ஜனநாயகக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து வலதுசாரிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. கொனராட் அடர்னர் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர்தான், சமூக சந்தைப் பொருளாதாரம் குறித்து நடைமுறை உதாரணங்கள் எமக்கு கிடைக்கின்றன.

ஜெர்மனியில் சமூக சந்தைப் பொருளாதாரத் திட்டம் இரண்டு முக்கிய வடிவங்களைப் பெற்றது. ஒன்று தொழில் பாதுகாப்பு. அதன் கீழ் அனைத்து தொழிலாளர்களும் தொழில் நிரந்தரத்துடன் ஓய்வூதியம் மற்றும் வேறு சமூக பாதுகாப்பு சேவைகளின் நன்மைகளை அநுபவிப்பவர்களாக ஆகினர். அடுத்தது, சமூகத்தில் அடிமட்ட மக்களுக்கு வரிவிலக்களிக்கும் திருத்தங்கள். 1950களில் ஜெர்மனியின் வரி வருமானத்தில் 95 விகிதம் அதிக வருமானம் பெறுபவர்களிடமிருந்து அறவிடப்பட்டது.

சோஷலிஸத்தோடு அல்லாது அவ்வாறான முதலாளித்துவ மறுசீரமைப்புகளுடம் ஒப்பிடும்போது, ஐக்கிய தேசியக் கட்சி கூறும் சமூக சந்தைப் பொருளாதாரம் முழுவதும் மோசடியானது என்பது தெரிய வருகிறது. இலங்கை தொழிலாளர்களில் பெரும்பாலானோர் Man Power, ஒப்பந்த மற்றும் சமயாசமய ஊழியர்களாகும். அது குறித்து எதுவுமே கூறவில்லை. இலங்கையின் வரி வருமானத்தில் 78 வீதம் மறைமுக வரியாகும். அதாவது, சாதாரண நுகர்வோனிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியாகும். அதிக வருமானம் பெறுபவர்களிடமிருந்து நேரடியாக 22 வீத வரியே அறவிடப்படுகிறது. அது குறித்தும் ஐதேக வின் சமூக சந்தைப் பொருளாதாரத் திட்டத்தில் எதுவுமே இல்லை. இங்கே பேசப்பட வேண்டிய இரு விடயங்கள் உள்ளன. ஒன்று, ஜெர்மன் என்பது ஏகாதிபத்திய நாடு. சுற்றியுள்ள நாடுகளில் சுரண்டும் செல்வத்தை கொண்டு நலன்புரி அரசை நடாத்திச் செல்லும் ஆற்றல் இருந்தாலும். பலவீனமான பொருளாதாரத்தை கொண்ட இலங்கை போன்ற நாடு அதனை பின்பற்ற முடியுமா? இரண்டாவது, முதலாளித்துவ நாடுகள் உலக மட்டத்தில் நலன்புரிவாத கென்ஸிய மாதிரியை பின்பற்றிய 1950களிலேயே ஜெர்மனி இத்திட்டதை செயற்படுத்தியது. முழு உலகும் நவ தாராளமயத்தை தழுவியிருக்கும் நிலையில் அது மீளமைக்கப்படுமென எதிர்பார்க்க முடியுமா? அல்லது, ஐக்கிய தேசியக் கட்சி கூறுவதைப் போன்று சமூக சந்தைப் பொருளாதாரம் மக்களை ஏமாற்றுவதற்கான மாற்றமா? இவர்கள் கூறும் சமூக சந்தைப் பொருளாதாரத்தின் உண்மையான முகத்தை அடையாளம் காண நாம் மீண்டும் ஐதேகவின் கொள்கை வெளியீட்டில் அது குறித்து காணப்படும் அறிமுகத்தை வாசிப்போம்.


**'உத்தேச சமூக சந்தைப் பொருளாதாரம் வலியுறுத்துவது திறந்த பொருளாதாரத்தின் அடிப்படையை விரிவாக்குதல் அல்லது பொருளாதார ஜனநாயகத்தையேயாகும்'.**

**முக மாந்ந ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# உளவியல் நோயின் சமூக சாரம்

**மார்க்சியம் – 13**



உளவியல் சிக்கல்கள், உளவியல் சிதைவுகள், சமூகப் பிரச்சனையாக மாறிவருகின்றது. இன்று முழு சமூகத்தையும் பாதிக்கக் கூடியளவுக்கு மனிதர்களை எப்படி பொருளாதாரக் கொள்கை உருவாக்குகின்றதோ, அதேபோல் தான் உளவியல் நோய்களும். உளவியல் நோய்கள் ஏன் தோன்றுகின்றன? இதற்கு தீர்வு என்ன? உளவியலை நோயாக இனம் காணும் மருத்துவம் மூலம், இதற்கு தீர்வு காண முடியுமா? சமூக விஞ்ஞானம் மூலம் இதற்கு விடை காண முனைவோம்.

உளவியல் ரீதியான சிதைவுகள் - சிக்கல்கள் - நோய்கள் சமூகத்தின் பொது இயல்பாக மாறி இருக்கின்றது. உளவியல் நோயென்று மருத்துவம் இனம் காணும் மனித செயற்பாடுகள், மனித நடத்தையாக, மனிதர்களுக்குள்ளான அக-புற முரண்பாடுகளாக மாறி சமூகத்தில் எதிர்வினையாக வெளிப்படுகின்றது.

இந்த வகையில் தற்கொலை மனப்பாங்கு - தனிமனித வன்முறை - தனிமையில் ஒதுங்குதல் - சதா புலம்புதல் - எதிர்மறையாகவே உணர்தல், தன்னம்பிக்கையை இழத்தல், அதீத பயம், குணாம்சம் ரீதியாக அடிக்கடி மாறுதல், அதீதமான ஆசைகள், அதிகமாக புகைத்தலும் - மது அருந்துதலும், போதைப்பொருள் பயன்படுத்துதல், உடல்ரீதியான வெளிப்பாடுகள் (பசியின்மை, துக்கமின்மை, மறதி, படபடப்பு, முடிகொட்டுதல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், பற்களைக் கடித்தல், நகத்தைக் கடித்தல் ...), நண்பர்கள் உறவினர்களில் இருந்து ஒதுங்கிப்போவது, தொலைக்காட்சி - சமூக வலைத்தளத்தில் காலத்தை போக்குவது, பிறரை (தூற்றுவது - திட்டுவது - கத்துவது - எரிச்சல் அடைய வைப்பது), அதிகம் தூங்குவது, பிரச்சனையைத் தவிர்க்க அதிகம் உழைப்பது - ஒதுங்கிக் கொள்வது, அதிக மருந்துகளை உட்கொள்வது, எதிலும் ஆர்வமற்ற தன்மை, குற்ற உணர்வு கொள்ளுதல், தனக்குள் சிரித்துக் கொள்வது, அடிக்கடி அழுவது, தன்னைப்பற்றியே மற்றவர்கள் பேசுவதாக உணர்வது, கூட்டத்தைக் கண்டு பயம், புதியவர்களை எதிர்கொள்ளப் பயம், மூடிய - உயரமான - இருண்ட இடத்தைக் கண்டு பயம், ஒன்றையே தொடர்ந்து செய்வது, அடிக்கடி சரி பார்ப்பது - அதையே செய்வது ... என்று பல வடிவிலான மனித செயற்பாடுகளை, உளவியல் நோயாக மருத்துவம் அடையாளம் காண்கின்றது. இது ஏன் எற்படுகின்றது? சமூகத்துக்கும் - இயற்கைக்குமான தொடர்பு என்ன?

## உளச் சிதைவை நோயாக மட்டும் குறுக்கிவிட முடியுமா?

இயற்கையான சூழலையும் - சமூகத் தன்மையையும் மனிதன் இழப்பதால், மனிதன் உளநோய்க்கு உள்ளாகின்றானா? இயற்கையையும் - சமூகத் தன்மையையும் அழிக்கும் தனிவுடமை சமூக அமைப்பு முறைமையின் கண்ணோட்டத்தில் சமூகரீதியான உளநோயை வெறும் நோயாக மட்டும் காட்டி அணுகுவது இதற்கு தீர்வாகுமா?

தனிமனிதனாக மனிதன் தனிமைப்பட்டுப் போகின்ற போது ஏற்படும் உளவியல் சிதைவே, மன நோயாக மாறுகின்றது என்பது பொது உண்மை. அப்படி இருக்க ஏன் தனிமனிதனாக, மனிதன் தனிமைப்பட்டுப் போகின்றான்? மனிதன் தனிமையாதல் என்பது, தனி மனிதத் தெரிவா? அல்லது இந்த சமூக அமைப்பு முறையின் விளைவா?

லகமயமாதலில் உலகம் மட்டும் குறுகி வரவில்லை, மனித வாழ்க்கை முறையானது, தனி மனிதத் தன்மை கொண்டதாகக் குறுகி வருகின்றது. இந்த பின்னணியில் சமூகரீதியான உளநோய் மனிதசாரமாகி விடுவது என்பது, இயற்கையினதும் - மனிதனதும் தேர்வா? அல்லது இது தனிவுடமை அமைப்பு முறையின் தேர்வா?

இன்று அனைவரும் உளநோய்க்குள்ளாகி உள்ளதையும், அதை வெளிப்படுத்தும் விதமே வேறுபட்டது என்பதையும் பொது மருத்துவம் ஏற்றுக் கொள்கின்றது. அப்படியானால் இது இயற்கையின் தேர்வா? அதாவது உழைப்பு மூலம் மனிதனாக பரிணாமடைந்த போதே தோன்றியதா?

## தொலைக்காட்சி நாடகங்களுக்கும் - உள நோய்க்குமான தொடர்பும்!

எமது இன்றைய சமூக அமைப்பு முறைமையானது, தனிவுடமையை முன்னிறுத்தி சொத்துடைமையை குவிக்கும் போட்டியை முன்தள்ளுகின்றது. இந்தப் போட்டியானது உலகத்தைக் குறுகிய ஒன்றாக மாற்றுகின்றது. இது மனிதனின் சமூகத் தன்மையை அழித்து விடுகின்றது. அதற்குப் பதில் தனிமனிதத் தன்மையையே, மனித வாழ்க்கையாக குறுக்கி விடுகின்றது. அதாவது சொத்துடமை தனிமனிதனிடம் குவியும் போது, அது இயல்பாகவே தன்னலமே மனிதத்தன்மையாக மாறி விடுகின்றது. தன்னை மையப்படுத்தி உலகத்தை காணும் தனிமனிதத்தனமானது, மனித அறிவாகவும் - வாழ்க்கையாகவும் சுருங்கி விடுகின்றது.

இந்தப் பின்னணியில் சமூகத் தன்மை சார்ந்த வாழ்க்கை முறையிலான பொது உளவியலை மனிதன் இழக்கின்றான். பதில் தனிமனிதனின் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட உளவியலே வாழ்க்கை முறையாக மாறுகின்றது. சுயநலம் கொண்ட தனிவுடமைச் சமூகத்தை, தனிமனிதன் தன்னலத்துடன் எதிர்கொண்டு போராடுவதே வாழ்க்கை முறையாகின்றது. இங்கு தனிமனிதனாக தனித்து சமூக - பொருளாதார வாழ்வியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு போராடும் போது, அதுவே சமூகரீதியான உள நோயாக மாறுகின்றது. இது எல்லா மனிதருக்குள்ளும் அளவுரீதியாக வேறுபடும் அதேநேரம், பண்புரீதியாக வேறுபடும் போது வெளிப்படையான மனநோயாக முற்றுகின்றது.

சமூகரீதியான உளநோய்க்காக, இன்று மனிதனை ஆற்றல்படுத்தும் முறைமை முன்வைக்கப்படுகின்றது. அதேநேரம் சமூகரீதியான உளநோய் தோன்றுவதற்கான காரணத்தை நீக்குவதில்லை. இங்கு ஆற்றல்படுத்தல் முறைமையானது, சமூகரீதியான மனித செயற்பாட்டையும் - வாழ்க்கையையும் முன்வைப்பதில்லை. மாறாக தனிமனித வாழ்க்கையும் - உளவியலும் தோன்றுவதற்கான காரணமான தனிவுடமை அமைப்பு முறைமையையே, ஆற்றுப்படுத்தல் முறைமையூடாக மறு வார்ப்பு செய்யப்படுகின்றது.

## தன்னலத்துக்கும் உளவியலுக்குமான உறவு குறித்து

எமது இன்றைய சமூக அமைப்பு முறைமையானது, தனிவுடமையை முன்னிறுத்தி சொத்துடைமையை குவிக்கும் போட்டியை முன்தள்ளுகின்றது. இந்த போட்டியானது உலகத்தைக் குறுகிய ஒன்றாக மாற்றுகின்றது. இது மனிதனின் சமூகத் தன்மையை அழித்து விடுகின்றது. அதற்குப் பதில் தனிமனிதத் தன்மையையே, மனித வாழ்க்கையாக குறுக்கி விடுகின்றது. அதாவது சொத்துடமை தனி மனிதனிடம் குவியும் போது, அது இயல்பாகவே தன்னலமே மனிதத்தன்மையாக மாறி விடுகின்றது. தன்னை மையப்படுத்தி உலகத்தை காணும் தனிமனிதத்தனமானது, மனித அறிவாகவும் - வாழ்க்கையாகவும் சுருங்கி விடுகின்றது.

இந்தப் பின்னணியில் சமூகத் தன்மை சார்ந்த வாழ்க்கை முறையிலான பொது உளவியலை மனிதன் இழக்கின்றான். பதில் தனிமனிதனின் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட உளவியலே வாழ்க்கை முறையாக மாறுகின்றது. சுயநலம் கொண்ட தனிவுடமை சமூகத்தை, தனிமனிதன் தன்னலத்துடன் எதிர்கொண்டு போராடுவதே வாழ்க்கை முறையாகின்றது. இங்கு தனிமனிதனாக தனித்து சமூக - பொருளாதார வாழ்வியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு போராடும் போது, அதுவே சமூக ரீதியான உள நோயாக மாறுகின்றது. இது எல்லா மனிதருக்குள்ளும் அளவு ரீதியாக வேறுபடும் அதே நேரம், பண்பு ரீதியாக வேறுபடும் போது வெளிப்படையான மனநோயாக முற்றுகின்றது.

சமூக ரீதியான உளநோய்க்காக, இன்று மனிதனை ஆற்றல்படுத்தும் முறைமை முன்வைக்கப்படுகின்றது. அதேநேரம் சமூக ரீதியான உளநோய் தோன்றுவதற்கான காரணத்தை நீக்குவதில்லை. இங்கு ஆற்றல்படுத்தல் முறைமையானது, சமூக ரீதியான மனித செயற்பாட்டையும் - வாழ்க்கையையும் முன்வைப்பதில்லை. மாறாக தனிமனித வாழ்க்கையும் - உளவியலும் தோன்றுவதற்கான காரணமான தனிவுடமை அமைப்பு முறைமையையே, ஆற்றுப்படுத்தல் முறைமையூடாக மறு வார்ப்பு செய்யப்படுகின்றது.

## தனிவுடமை அமைப்பும் தனிமை பெறும் வாழ்க்கை முறையும்

மனிதன் இயற்கையின் சாரத்தையும் - சமூக சாரத்தையும் இழக்கும் போது, உளவியல் நோய் மனிதசாரமாக மாறுகின்றது. தனிமனிதனை மையப்படுத்திய வாழ்க்கை முறையானது, சமூகத்தில் இருந்து மனிதனை தனிமைப்படுத்தி விடுகின்றது. பொருளை உலகமாக்கிவிடும் போது, இயற்கையில் இருந்து மனிதனை விலத்திவிடுகின்றது. இங்கு சமூகம் - இயற்கை என்பது எதார்த்தமான போதும், மனிதனின் வாழ்க்கைமுறை இதற்கு முரணாக பயணிப்பதானது சமூக ரீதியான உளவியல் நோய்க்கான பொதுக் காரணமாக இருக்கின்றது.

சமூகமாக வாழ்வதும் - இயற்கையுடன் ஒன்றியும் பயணிக்கும் போது, தனிமனித உளவியல் கூட்டுத்தன்மை கொண்டதாக இயங்கும். இங்கு தனிமனித உளவியல் சிதைவு தோன்றுவதற்குரிய தன்மையை, இந்தச் சூழல் இல்லாதாக்குகின்றது. இதற்கு மாறாக தனிவுடமை சமூகத்தில் தனிமனிதனாக மாறிவரும் மனிதன், தன்னளவில் தான் குறுகி உளவியல் பாதிப்புக்குள்ளாகின்றான்.

## தனிமனிதன் தீர்வு காணும் வாழ்க்கை முறையே உளவியல் நோயாகும்

வாழ்வுக்காக மனிதன் பொருளை பெறுவது தொடங்கி இயற்கையான பாலியல் தேவை பெறுவது வரை, தனித்து தன் சுயநலத்துடன் அணுகும் போக்கும் - அதில் திருப்தியற்ற தன்மையும் உளவியல் நோயாக மாறுகின்றது.

உளவியல் நோய் தனிமனித சிதைவின் ஒரு பொது வெளிப்பாடு. தனிச் சொத்துடமை அமைப்பில், பிரச்சனைகளுக்கு தனிமனிதனே தீர்வுகாண வேண்டும் என்பது பொது விதி. இந்த தீர்வை வந்தடைய, அவனுக்கு முன்னுள்ள தேர்வு தனக்குள் தானே தன்னைக் குறுக்கிக் கொள்வது தான். இது தீர்வின்றி முற்றும் போது, உளவியல் சிதைவாக மாறுகின்றது.

உதாரணமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் ஒரு பெண், அதை தனித்து எதிர்கொள்ளும் போது, தற்கொலையை நாடுதல் - தனிமைப்பட்டுப் போதல் - ஆண்வெறுப்பு - பாலியல் மீதான பயம் - சமூகம் மீதான நம்பிக்கை இன்மை ... என்று உளவியல் நோயாக மாறுகின்றது. இதை சமூகம் அந்த பெண்ணுடன் கூட்டாக அணுகும் போது, மேற்கண்ட நோய்களுக்கு இடமிருப்பதில்லை. ஆனால் சமூகம் தனிவுடமையை அடிப்படையாகக் கொண்ட ஆணாதிக்கத் தன்மையுடன் அணுகும் போது, ஆணாதிக்க கண்ணோட்டத்தில் சமூகத்தில் ஒதுக்கிவிடுகின்ற - தனிமைப்படுத்தி விடுகின்ற போக்கு நோயின் மற்றொரு சமூகக் கூறாகும். இங்கு

1.தனிமனிதனாக சிந்திக்க வைக்கின்ற தனிவுடமை சமூக முறைமையும்

2.தனிவுடமையை அடிப்படையாகக் கொண்ட சமூகமும் மூலமான தீர்வுகளும்

மனநோயின் இரு வேறு தன்மை கொண்டதாகவும், இறுதியில் தனிமனித எல்லைக்குள் முடக்கியும் விடுகின்றது. இறுதியில் சமூகம் இங்கு தனிமனிதனில் இருந்து அன்னியமான ஒன்றாக மாறிவிடுகின்றது.

தனிவுடமைக்குப் பதில் பொதுவுடமை உருவாக்கும் சமூக வெளிப்பாடு என்பது, கூட்டு மனபாங்கு கொண்டது. தனிமனிதனை தனிமைப்படுத்துவதில்லை. தனிமனிதப் பிரச்சனை சமூகப் பிரச்சனையாக மாறுகின்றது.

கூட்டு உளவியல் மனப்பாங்குக்கும் - தனிமனித உளவியல் மனபாங்குக்கும் உள்ள வேறுபாடுகள் இரு வேறுபட்டது என்பதும், அது தனிமனித உளவியல் நோய்க்குரிய வாழ்க்கை முறையை இல்லாதாக்குகின்றது. இந்த வகையில் உளவியல் நோயில் இருந்து மனிதன் விடுபட, சமூக தன்மையையும் - இயற்கையுடன் ஒன்றிய வாழ்வுக்கு வந்தடைய வேணடும். அதாவது தனிவுடமைக்கு பதில் பொதுவுடமையையும் - பொருள் உலகுக்கு பதில் இயற்கையுடன் ஒன்றிய வாழ்வையும் உருவாக்க வேண்டும். சமூக விஞ்ஞானமானது இதை சமூகப் பிரச்சனையாக அணுகுவதுடன், சமூகரீதியான நடத்தைகள் மூலம் தீர்வு காணமுனைகின்றது.



படிப்பகம்

# மருத்துவத்தில் பால்வாதமும் சிறு விவாதமும்

எமது சமூக -அரசியல் விவாதத்தளத்தில் மருத்துவத்தை - அதன் பின்னணியில் உள்ள சிந்தனைப் போக்கை கேள்விகுள்ளாக்கும் பதிவுகள் பெருமளவில் வெளிவரவில்லை. இந்தவகையில், மேற்படி கருப்பொருள் சார்ந்து ஒரு நண்பர்கள் குழாமுக்குள் நடந்த விவாதத்தின் செறிவு இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

பதிவு: இராகுல் சந்திரா

அறிமுகம்:

சில மாதங்களுக்கு முன்பு "அல்ஜசீரா" தொலைக்காட்சியில் மருத்துவம் தொடர்பான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் மருத்துவத்துறையில் வெளிப்படும் பால்வாதம் குறித்து பேசப்பட்டது. ஆண் பெண் உடல்களுக்கிடையில் முக்கியமான வேறுபாடுகள் இருக்கின்றன. இதனால் பல்வேறு நோய்கள் தொடர்பாக இவ்வுடல்கள் வெளிப்படுத்தும் குணங்குறிகளிலும் (symptoms) வேறுபாடுகள் காணப்படுகின்றன. மருத்துவத்துறையில் காணப்படும் பால்வாதம் காரணமாகவும், ஆண்களே பெரும்பாலும் மருத்துவ நிபுணர்களாகவும் இருப்பதனாலும், கூடவே ஆண்களின் உடலிலேயே மருத்துவ ஆய்வுகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படுவதனாலும், நவீன மருத்துவ விஞ்ஞானமானது பல சந்தர்ப்பங்களிலும் பெண்களது உடலில் ஏற்படும் நோய்கள் பற்றிய அணுகுமுறைகளில் தொடர்ச்சியாக தவறிழைத்து வருகிறது என்பதே இந்த வாதத்தின் சாராம்சமாகும்.

இந்த குறிப்பிட்ட நிகழ்ச்சியில் இதயநோய் தொடர்பாக ஆண் - பெண் இடையே காணப்படும் அறிகுறிகளின் வேறுபாடுகளும், மரபான இதயவியல் நிபுணத்துவமானது (Cardiologist) இந்த வேறுபாடுகளை கவனிக்கத்த தவறுவதால், பெண்களது இதயநோய்க்கான அறிகுறிகள் வெளிப்படும்போது, அவை பெரும்பாலான இதயவியல் நிபுணர்களால் தவறவிடப்படுவதும், இது தவிர்க்க முடியாமல் பல பெண்கள் அநாவசியமாக இதயநோயினால் இறக்க நேர்வது குறித்தும் குறிப்பிடப்பட்டது. இதனால் இதயநோய் குறித்த ஆய்வுகளில் பெண் இதயவியல் நிபுணர்களது பங்குபற்றுதலும், பெண் உடல்களில் இந்த நோயின் அறிகுறிகள் பற்றி கவனமாக ஆய்வு செய்வதும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மூன்று பெண் இதயவியல் நிபுணர்களே கலந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வு பற்றிய இணைப்பு link / இணையவிலாசம் ஆனது எமது நண்பர்களிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதில் ஆண்களும் பெண்களும் இருந்தார்கள். சில மருத்துவர்களும் இருந்தார்கள். இதனை அடுத்து எமக்குள் ஒரு மிகவும் காரசாரமான விவாதம் நடைபெற்றது. பெரும்பாலானவர்கள் இந்த ஆவணத்துடன் முழுமையான உடன்பாடு தெரிவித்தபோதிலும், ஆண் மருத்துவர்களுக்கு இதனுடன் அறவே உடன்பாடு இருக்கவில்லை. இதயநோய் பற்றி தமக்கு மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கும்போதே, இதயநோய்க்கான பொதுவான குணங்குறிகள் குறித்தும், அரிதான குணங்குறிகள் குறித்தும் கற்பிக்கப்படுவதாகவும், இந்த நிகழ்வில் கூறப்படும் தகவல்கள் எதுவுமே தமக்கு புதிதாகக இல்லையெனவும் வாதிட்டனர்.

அப்படியானால், இப்படிப்பட்டதொரு உலகத்தரமான, பிரபலமான "அல்ஜசீரா" தொலைக்காட்சி நிகழ்வில் மூன்று பிரதானமான பெண் இதய நிபுணர்கள் இவ்வாறு வாதிப்பது ஏன் என்பது தான் இங்கு எழும் கேள்வி!

"பெண்ணியவாதிகள் இப்படித்தான், சிறிய பிரச்சனைகளையெல்லாம் தூக்கிக்கொண்டு கலவரம் பண்ணுகிறார்கள்" என்பது பதிலாக அமைந்தது ஆண் வைத்தியர்களிடமிருந்து. இங்கே இந்தப் பெண்மருத்துவர்களது, இதயவியல் நிபுணர்களது வாதங்கள் அப்பட்டமான தவறுகளாக இருப்பின், அவர்களது தொழில்துறை எதிர்காலமே (Professionalism) பாதிக்கப்படக்கூடிய ஆபத்து உள்ளதே என்ற கேள்விக்கு, "இந்த செயற்பாட்டின் மூலமாக இவர்களது தொழில்வாய்ப்புகள் இன்னும் செழிப்புறும் வாய்ப்பே இருப்பதாக" பதில் வந்தது.

## எப்படி அவ்வாறு கூற முடியும்?

இனிமேல் பெண்கள் அனைவரும் பெண் இதயவியல் நிபுணர்களிடமே செல்லும் நிலை உருவானால் அது "பெண்ணியம் பேசும்" நிபுணர்களுக்கு அதிகமான "நோயாளிகளை" கொண்டுவந்து சேர்க்கும் என்பது மேற்படி விவாதத்தில் கலந்து கொண்ட ஆண்களின் பதில்.

மிகவும் முக்கியமான அறிவார்ந்த பிரச்சனைகள் குறித்து மிகவும் தீவிரமான கருத்து முரண்பாடுகள் தோன்றும்போது, எதிர்த்தரப்பாரை இவ்வாறு தாக்குவது சரியானதுதானா?

மரபான "அறிவுக்கு" சவாலாக அமையக்கூடிய கருத்துக்களை நாம் அதேதளத்தில் முகம்கொடுக்காமல், சம்பந்தப்பட்டவர்களது நாணயத்தை எடுத்த எடுப்பிலேயே கேள்விக்குள்ளாக்குவது என்பது ஒரு அறிவார்ந்த விவாதத்தின் அறமாக அமையமுடியுமா?.

1. மரபார்ந்த சமூகங்களிலும், ஏன் எமது சமூகங்களில் மாத்திரமன்றி, மேற்கு சமூகங்களில் கூட ஒரு காலம்வரையில் பெண்களே, பெண்கள் தொடர்பான மருத்துவங்களை கவனிப்பவர்களாக இருந்தனர். பெண்நோயியல் (gynecology) மற்றும் மகப்பேற்று (obstetrician) விடயங்களை பெண்களே கையாண்டார்கள். நவீன சமூகத்தில் இது எவ்வாறு ஆண்களது கைகளுக்கு சென்றது என்று நாம் சிந்தித்ததுண்டா? நவீன சமூகத்தில் பெண் உடல் தொடர்பான முக்கிய விடயங்கள் ஆண்களது கைகளில் போய்ச்சேர்ந்துள்ளதால் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் என்ன?

இந்த இரு முக்கிய கேள்விகள் தொடர்பான ஒரு விவாதமும் மேலே குறிப்பிட்ட நண்பர்களிடேயே நடைபெற்றது.

பெண் உடல் ஆண்களது அதிகாரத்தின் கீழ் வந்தவுடன் கர்ப்பம், பிரசவம் என்பவை "நோய்களாக" ஆக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த இயற்கையான உடல் நிகழ்வுகளில் பெண்களது தன்னிலை (subjectivity) மற்றும் சுயாதீனம் (Autonomy) என்பவை மறுக்கப்பட்டு, பெண் உடலும், அதன் இயல்பான செயற்பாடும் மருத்துவ நிபுணர்களால் "கண்காணிக்கப்பட" வேண்டிய நோய்களாக ஆக்கப்பட்டுள்ளன. பல சந்தர்ப்பங்களில், அவசியமற்ற அறுவை சிகிச்சைகள் (Cesarean) ஆண் நிபுணர்களினால் பெண்ணுடைய சம்மதமும் (informed consent) இன்றி நடைபெறுகின்றன. பிரசவம் என்பது ஒரு பெண்ணின் செயலூக்கமான செயற்பாடு என்பதில் இருந்து, பெண்ணை செயற்பாடற்ற ஜடமாக மாற்றிவிட்டு, நிபுணரின் செயலாக மாற்றப்படுகிறது. அதாவது பெண்ணுடைய (Agency) செயலாண்மை - சுயமாக முடிவெடுக்கும் திறன்- மறுப்பதாக இது அமையவில்லையா? இது பெண்களை, தமது இயல்பான உடற்செயற்பாடுகளில் இருந்தே அந்நியப்படுத்துவதாக அமைந்துவிடுகிறது என்பது பெண்களது வாதம்.

மருத்துவம் என்பது "தூய விஞ்ஞானம்" ஆகும். இதில்போய் ஆணாதிக்கம், தலையீடு, அந்நியமாதல் என்றெல்லாம் கூறுவது சற்று அபத்தமானது. நவீன மருத்துவமானது பிரசவத்தில் பெண்கள் இறப்பதை கணிசமாக குறைத்துவிட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் குழந்தை கருப்பையில் குறுக்கே இருந்தால் அதனை அறுவைச்சிகிச்சையினால் மாத்திரமே சுகமாக பிரசவிக்க முடியும். கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகால தாய்சேய் தொடர்பான இலங்கைப் புள்ளிவிபரங்களைப் பாருங்கள். பெண்கள் பிரசவத்தில் இறப்பது எத்தனை விகிதத்தால் குறைக்கப்பட்டுள்ளது?. அறுவைச்சிகிச்சை முறையும், நுண்ணுயிர் கொல்லும் (antibiotics) மருந்துகளும் பிரசவத்தில் தாய்மார் இறப்பதையும், குழந்தைகள் இறப்பதையும் (child mortality) மிகப்பெருமளவில் குறைத்துள்ளன. இந்த நிலையில் நவீன மருத்துவத்தை குறைசொல்வது, கர்ப்பம் மற்றும் மகப்பேற்றை இயல்பான உடலியல் செயற்பாடு, வீட்டில் பிரசவத்தை பார்க்கலாம் என்பது போன்ற கருத்துக்கள் பெண்ணியவாதிகளின் அதீத போக்கிறகு சரியான சான்றுகளாகும், இது பெண்களின் கருத்துக்கு எதிராக ஆண்களால் முன் வைக்கப்பட்ட கருத்து.

-சரி, ஒரு வாதத்திற்காக சில சந்தர்ப்பங்களில் மருத்துவ தலையீடு அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வோம் என்று வைத்துக்கொண்டாலும், இன்று உலகளாவியரீதியில் தேவையற்ற அறுவை சிகிச்சைகள் (cesarean operations) நடைபெறுவது பற்றி என்ன கூறப்போகிறோம்?. அதுவும் மாலை 5 மணியளவில் பெண்ணுக்கு சுகப்பிரசவம் நடக்கவில்லையானால், மருத்துவ நிபுணர்கள் வீட்டுக்கு போய்சேரும் அவசரத்தில் அறுவை சிகிச்சை மூலமாக அந்த பிரசவத்தை முடித்துவைப்பதாக எழும் குற்றச்சாட்டு குறித்து என்ன கூறுகிறீர்கள்?

பொதுவாகவே தேவையற்ற பல சிகிச்சைகள், இதில் அறுவைச் சிகிச்சைகள் உட்பட பல நடக்கின்றன என்பது உண்மைதான். இதில் முக்கியமான காரணமாக அமைவது மருத்துவத்தை தனியார்மயப்படுத்தி, அதில் மருத்துவ காப்புறுதி நிறுவனங்களும், மருத்துவ நிபுணர்களும் இலாபம் பார்க்கும் ஒரு துறையாக மாற்றிய அரசின், சர்வதேச மூலதனத்தின் பங்கை அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அத்துடன் ஒரு வைத்தியசாலையில் இருக்கும் வளங்களின் பற்றாக்குறை, மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை, மற்றும் சத்திரசிகிச்சை அறைகள் என்பவற்றின் பற்றாக்குறை போன்றவற்றிற்கு முக்கியமான பாத்திரம் இருப்பது உண்மைதான். ஆனால் இதனை ஆணாதிக்கமாக சித்தரிக்க முனைவது பெண்ணியவாதிகளது தவறான செயற்பாடு. இது ஆண் விவாதிகளிடமிருந்து வந்த பதில்.

அப்போ, இந்த விடயத்தில் பால்வாதத்திற்கு பங்கு அறவே கிடையாதா? இது பெண்களின் கேள்வி.

இல்லவே இல்லை! என்பது அவர்களின் பதிலாக அமைந்தது.

2. இரண்டாவது பகுதியில் எழுப்பப்பட்ட, ஆனால் நாம் விவாதிக்காத அடுத்த கேள்விக்கு வருவோம். பெண் உடல் பற்றிய விடயங்கள், மரபான சமூகத்தில் பெண்களின் கரங்களில் இருந்தது, எப்படி "ஆண்" "நிபுணர்களது" கைகளுக்கு மாறியது? இது முக்கியமான பிரச்சனை அல்லவா?

இதனை சரிவர புரிந்து கொள்வதனால் நாம் ஐரோப்பிய வரலாற்றின் சில பக்கங்களை புரட்டியாக வேண்டும்.

பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் கிறிஸ்தவ மத நிறுவனங்கள் சில பிரச்சனைகளை எதிர்கொண்டன. அதாவது ஐரோப்பிய மக்கள் பெருமளவில் கிறிஸ்தவர்களாக மாறியிருந்தபோதிலும், அவர்கள் தமது மரபார்ந்த மதங்களின் (paganism) சடங்குகளையும் தொடர்ந்து பின்பற்றிக்கொண்டே இருந்தார்கள். குறிப்பாக குளிர்காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் திருவிழா, மந்திரம், மூலிகை மருத்துவம் போன்றவற்றில் "சூனியக்காரிகள்" என அழைக்கப்பட்ட மருத்துவமாதுகளின் பாத்திரம் போன்றவை இவர்களுக்கு குறிப்பான பிரச்சனைகளாக இருந்தன.

கிறிஸ்துவின் பிறந்தநாளை குளிர்காலத்தைத் தொடக்கும் திருவிழா நாளுக்கு மாற்றுவதன் மூலமாக முதல் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டது. அடுத்த பிரச்சனை இந்த மருத்துவமாதுகள் பற்றிய பிரச்சனை. இந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு pagan -மரபார்ந்த மதங்களின் மத நடவடிக்கைகளுக்கு எதிராக தீவிரமான வன்முறையுடன் தாக்குதல்கள் தொடங்கப்பட்டன.

இது "சூனியக்காரிகளுக்கு எதிரான வேட்டை" (Witch hunt) என அழைக்கப்பட்டு இரண்டு நூற்றாண்டுகளுக்கு எதிராக தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்டது. இந்தத் தாக்குதல் முடிவுக்கு வந்தபோது, பல்வேறு மதிப்பீடுகளின்படி, ஒரு மில்லியன் தொடக்கம் ஒன்பது மில்லியன் வரையிலான பெண்கள், குறிப்பாக மருத்துவமாதுகள் கொல்லப்பட்டிருந்தார்கள்.

இப்படியாக மூன்று காரணங்கள் பெண் உடல் பற்றிய விடயங்கள் ஆண்களின் கரங்களுக்கு கைமாறியதை தீர்மானித்தன.

1) மரபார்ந்த சமூகத்தில் இருந்த மருத்துவமாதுகளை "சூனியக்காரிகளுக்கு எதிரான வேட்டை" எனும் பெயரில் அழித்தொழித்தமை.

2) மருத்துவம் என்பது ஓர் "விஞ்ஞானமாக" ஆக்கப்பட்டு, அதில் ஈடுபடுவதற்கு நிபுணர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட வேண்டும் என்ற "நிபுணர்களது" போராட்டம்.

3)இந்த நிபுணர்களைப் பயிற்றுவிக்கும் "மருத்துவக் கல்லூரிகளுக்கு" பெண்களை அனுமதிக்க மறுத்தமை. இது பெண்கள் அறிவுத்திறனற்றவர்கள் என்ற ஆணாதிக்க தப்பெண்ணத்தின் அடிப்படையில் நடைபெற்றது.

எமது சமூகத்திலும் "மடமை" என்பதை பெண்ணின் "நற்குணங்களில்" ஒன்றாக பார்க்கும் மரபு இருப்பதை அறிவோம் தானே. பெண்புத்தி பின்புத்தி என்பதும், அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்பதும் இன்றும் அழியாமல் இருக்கும் பழமொழிகள் அன்றோ!

மேலதிக வாசிப்புக்கும், தெரிந்து புரிந்து கொள்வதற்கும், மற்றும் உசாத்துணையாகவும் :

1."அல்ஜசீரா" தொலைக்காட்சியில் மருத்துவம் தொடர்பான ஒரு நிகழ்ச்சி

http://stream.aljazeera.com/story/201410062006-0024205


2. http://www.brighamandwomens.org/Departments_and_Services/womenshealth/ConnorsCenter/Policy/ConnorsReportFINAL.pdf

3.https://www.youtube.com/watch?v=LOQND4fVF_w



படிப்பகம்

# வாக்களிக்கப்பட்ட நல்லாட்சியும் வாக்குப் போட்ட குடிமக்களும்




இலங்கையின் 15வது நாடாளுமன்றத் தேர்தல் முடிந்துவிட்டது. நல்லாட்சிக்கான தங்கள் ஆதரவை நாட்டு மக்கள் தெரிவித்துள்ளனர். நல்லாட்சிக்கான ஒரு அரசும்(தேசிய) அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு சர்வதேச ஆசீர்வாதங்களும்-வாழ்த்துக்களும் வாரி வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல் பிரச்சாரத்தில் வாக்குறுதிகளையும் மாயாஜாலக் கதைகளையும் கூறி நாடாளுமன்றக் கதிரைகளை வென்றவர்கள் தற்போது அடுத்த 5 வருடங்களுக்குரிய தங்கள் அரசியல் வியாபாரத்தைத் திறம்பட தொடருவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

மக்களோ ஆப்பிழுத்த குரங்கு போல் செய்வதறியாது திகைத்துப் போய் நிற்கின்றனர். நல்லாட்சியை எதிர்த்து தேர்தல் களத்தில் நின்றவர்கள் இன்று நல்லாட்சியை செயற்படுத்தும் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். சட்டத்தின் தண்டனைக்குரியவர்கள் இன்று சட்டங்களை உருவாக்கும் தகுதி படைத்த பாராளுமன்ற உறுப்பினர்களாக-அமைச்சர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படுகின்றன. குற்றவிசாரணைகள் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு திசையில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. நீதிமன்றத் தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா வந்து நல்லாட்சி அரசைப் பாராட்டிவிட்டுச் சென்றுள்ளது. ஜேர்மனி இலங்கையில் கார் உற்பத்தி தொழிற்சாலை அமைக்க உள்ளது. சம்பூர் மக்களுக்கு 1 மில்லியன் டாலர் நிதியை அமெரிக்கா வழங்கியுள்ளது.. மேலும் நாடு பூராவும் பாடசாலைகள் சந்தைகள் வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கும் நிதியை ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. 77ல் ஜே.ஆர். கூறியதுபோல் அவரது வழித்தோன்றலான ரணிலும் மீண்டும் இலங்கையைச் சிங்கப்பூராக மாற்றுவதாக உறுதியளித்துள்ளார். உலக ஆளும் வர்க்க ஆதிக்கவாத சக்திகளின் புதிய தாராளவாத பொருளாதார திட்டத்தின் பின்னணிதான் இந்த சிங்கப்பூர் கோஷமாகும். சிங்கப்பூர் மக்கள் மிக நேர்த்தியாக அழகாக அலங்கரிக்கப்பட்ட நவீன அடிமைகள் என்பது இலங்கைக் குடிமக்கள் அறிந்து கொள்ளாத ஒரு விடயமாகும்.

எனவே இலங்கை மக்கள் அதிலும் குறிப்பாக தமிழ் மக்களாகிய நாம் சிங்கப்பூர் கனவில் வாழ்பவர்கள். சிங்கப்பூர் வாழ்வுக்காக எதையும் தியாகம் செய்ய நாம் தயங்கமாட்டோம். ஆனால் இந்த இலங்கையைச் சிங்கப்பூர் ஆக்கும் ஜே.ஆரின் புதிய அரசியலமைப்புத்தான் தெற்கில் சிங்கள இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சிக்கும் வடக்கில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கும் வித்திட்டது. எனவே இனிமேலாவது நாம் இந்த புதிய தாராளவாத பொருளாதார சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு செயற்படக்கூடிய அரசியல் விழிப்புணர்ச்சியை எட்டாவிட்டால் மறுபடி மீண்டும் இந்நாட்டில் ஒரு இரத்தக்களரி ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகும்.

உலக நாடுகளில் மனித உரிமைகள் என்ற பெயரில் இன்று தினமும் ஆயிரக்கணக்கில் கொல்லப்படுகின்றனர். ஆனால் அந்த மோதல் இடம்பெறும் நாடுகளின் வளங்களும் அந்த நாட்டு மக்களின் உழைப்பும் உலக மூலதனம் படைத்த நிறுவனங்களினால் சுரண்டப்படுகின்றன. இம்மோதல்களில் இரு தரப்பினராலும் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் யாவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாக கூறும் பணபலமிக்க ஜனநாயக நாடுகளின் உற்பத்தி என்பது நகைமுரண் ஆகும்.

எமது மக்கள் பிரதிநிதிகள் தம்மை தெரிவு செய்தனுப்பிய மக்களுக்காக வழங்கப் போவது அடிமைத் தளைகளையே. உரிமைகள் என்ற கோஷத்துடன் கொடுமைகளையே இதுவரை எமக்குப் பெற்றுத் தந்துள்ளனர். 68 வருடங்களாக அவர்கள் எமக்குத் பெற்றுத் தந்தது அடியும் உதையும் சிறையும் சித்திரவதையும் மரணத்தையும் மட்டுமே. இவற்றின் சிகரமாக முள்ளிவாய்க்கால் புதைகுழியையும் ஏற்படுத்தித் தந்துள்ளனர்.

அமெரிக்க பிரதிநிதி நிஷா பிஸ்வால் இலங்கைக்கு வருகை புரிந்து பல தரப்பட்ட அரசியல் தலைமைகளைச் சந்தித்து சென்றபின் இலங்கையின் வருங்கால அரசியல் போக்கின் திசை நன்கு புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. சர்வதேச போர்க்குற்ற விசாரணையை எதிர்த்த தெற்கு அரசியல்வாதிகளுக்கு இன்று சற்று ஆறுதல் ஏற்பட்டுள்ளது. வடக்கில் உள்ள அரசியல் தலைமைகள் அமெரிக்கா தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன் "அப்பாடா" என்று சற்று ஆசுவாசப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆகஸ்ட் 17க்கு முன்னர் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் சூளுரைகளும் காற்றில் பறந்தோடிக் கொண்டிருக்கின்றன. சர்வதேச சமூகத்திற்கு தற்சமயம் தமிழர் பிரச்சனை தேவைப்படாது. இலங்கையின் புதிய நல்லாட்சித் தேசிய அரசுக்கும் சர்வதேச விசாரணை பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மக்கள் பிரதிநிதிகளின் மேலாதிக்க அதிகார ஆடம்பர வாழ்க்கை அடுத்த 5 ஆண்டுகளுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. அரச சலுகைகளும் பாதுகாப்பு வசதிகளும் எமது பிரதிநிதிகளை குறுநில மன்னர்களாக ஆக்கிவிட்டுள்ளது. இனிமேல் அவர்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள். நீதித் தேவதை அவர்களை அணுகவே முடியாது.

ஜனவரி 8க்கு முன்பு வரை சர்வாதிகாரத்துக்கு முண்டு கொடுத்தவர்கள்தான் இன்று நல்லாட்சிக்கும் தண்டு கொடுக்கிறார்கள். நல்லாட்சியின் கீழ் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டம் அமுலில் உள்ளது. நல்லாட்சிக்காக வாக்களித்த சிங்கள மக்கள் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதை உணருகிறார்கள் சுய ஆட்சியை வேண்டி ஓட்டுப் போட்ட தமிழ் மக்கள் வானத்தை அண்ணாந்து பார்த்தபடி உள்ளனர்.

இன்று தெற்கு அரசியல் தலைவர்கள் அமெரிக்காவைப் பாராட்டுகிறார்கள். வடக்கு அரசியல் தலைமைகள் அமெரிக்காவை நம்புகிறார்கள். ஆக மொத்தம் அடுத்த 5 வருடங்களுக்கு இலங்கையின் இனப் பிரச்சனை இலங்கையில் நீறுபூத்த நெருப்பாக,தணலாகத் தணிந்தபடி இருக்கும்.

# எதிர்க்கட்சித் தலைவரும் குடிமக்களும்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டாவது தடவையாக ஒரு தமிழ் பேசும் மகன் அரசாங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றுள்ளார். இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகப் பேசப்படுகிறது. இது போன்று ஒரு பரபரப்பாகப் பேசப்பட்ட சம்பவம் 1977லும் இடம் பெற்றிருந்தது.

21 யூலை 1977 தேர்தலில் அதிக ஆசனங்களைப்(18) பெற்றிருந்த இரண்டாவது கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு (TULF) எதிர்க்கட்சிப் பதவி கிடைத்திருந்தது. இம்முறை அதிக ஆசனங்களைப்(16) பெற்ற மூன்றாவது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு(TNA) இப்பதவி கிடைத்துள்ளது.

இந்நிலைமையில் இன்றைய "நல்லாட்சி அரசாங்கத்தினால் இலங்கையின் இனப்பிரச்னைக்கான ஒரு தீர்வு எட்டப்படும் " என நம்பிக்கை வைத்துள்ள புதிய எதிர்க்கட்சித் தலைவர் "நான் இலங்கையின் அனைத்துக் குடிமக்களுக்கும் உரித்தான எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றுவேன்" எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

ஒரு அரசாங்கத்தின் எதிர்க்கட்சிப் பதவியானது அதிகாரமற்ற பிரதமர் பதவிக்கு ஒப்பானதாகும். அத்துடன் அடுத்த தேர்தலில் அவர் பிரதமர் பதவியைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்பு உடைய ஒரு படி நிலையாகும். அதனால் அவருடைய செயற்பாடுகள் யாவும் அடுத்த



தேர்தலில் நாட்டின் குடிமக்கள் அவர் சார்ந்த கட்சியை பெரும்பான்மையாக ஆதரிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவரின் கட்சி வட-கிழக்குத் தமிழ் மக்களின் அபிலாசைகளை மட்டும் பிரதிபலித்தே தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. எனினும் அண்மையில் கொழும்பில் ஏற்பட்டுள்ள புத்தம் புதிய அரசியல் மாற்றங்கள் ஒரு தமிழரை மீண்டும் ஒருமுறை நாடு முழுவதுக்குமான எதிர்க்கட்சித் தலைவராக



ஆக்கியுள்ளது.

1977ல் இதே இலங்கை அரசாங்கத்தில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற வாக்களித்தவர்கள் பலர் இன்றைய அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் அங்கத்தவர்களாகவும் உள்ளனர். அவர்களுடைய ஆதரவுக் கரங்கள் இன்றைய தமிழ் எதிர்க்கட்சித்

10ம் பக்க தொடர்ச்சி



படிப்பகம்

# அப்படி சொல்வார்களாம் இப்படி செய்வார்களாம்



இரு வாரங்களுக்கு முன் அரசியல்ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சில சம்பவங்கள் அரங்கேறின. அவற்றில் மிக முக்கியமான விடயம் என்னவென்றால், அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமையும், அதன் முதலாவது கூட்டம் நடந்தமையும்தான். அரசியலமைப்புச் சபையின் தலைவர் கரு ஜயசூரியவின் தலைமையில் செப்டம்பர் 10ம் திகதி நாடாளுமன்ற கட்டடத்தில் கூட்டம் நடைபெற்றது. அதன்படி உத்தியோகரீதியில் நியமனமான சபாநாகயர் கரு ஜயசூரியவைத் தவிர, உத்தியோகரீதியில் நியமனமாகும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன், ஜனாதிபதியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பாடலி சம்பிக ரணவக, பிரதமரின் பிரதிநிதியான அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவரின் பிரதிநிதியான டப்லிவ். டீ.ஜே.சௌவிரத்ன ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பிரதமரையோ எதிர்க்கட்சித் தலைவரையோ பிரதிநிதித்துவம் செய்யாத பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் விஜித ஹேரத் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எப்படியிருந்தாலும், சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் மூவரை தெரிவுசெய்வது குறித்தே அன்றைய கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. கலாநிதி ஏ.டீ. ஆரியரத்ன, கலாநிதி ராதிகா குமாரசுவாமி மற்றும் ஜனாதிபதி வழக்குரைஞர் சிப்லி அஸீஸ் ஆகியோரின் பெயர்கள் அதற்காக முன்வைக்கப்பட்டன. அரசியலமைப்புச் சபை மீண்டும் 21 மற்றும் 23ம் திகதிகளில் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கு பெயர் குறிக்கப்பட்ட மூவரின் பெயர்களையும் அங்கீகரிப்பதற்காக செப்டம்பர் 22ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டது,

## சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனமானவையா?

19வது அரசியலமைப்பு திருத்தத்தில் காணப்படும் தேவையற்ற விடயங்களுக்கிடையில், ஓரளவு தேவைப்படக்கூடிய ஒரு விடயமானது சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் விடயம்தான். பல்வேறு துறைகள் சுயமாக இயங்குவதை உறுதி செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவைக்கான ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, ஊழல் மற்றும் மோசடிகள் சம்பந்தமான விசாரணை ஆணைக்குழு, நிதித்துறை சம்பந்தமான ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய கொள்வனவு சம்பந்தமான ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழக ஒதுக்கீட்டு ஆணைக்குழு ஆகியவற்றை ஸ்தாபிப்பதற்கு அதன் மூலம் சட்டங்கள் தயாரிக்கப்படும். அந்த ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சபையின் மூலம் நியமிக்கப்படுவர். அரசசேவை, பொலிஸ், நீதித்துறைச்சேவை போன்ற சேவைகளுக்கு அரசியல் வற்புறுத்தலை கூடியளவு குறைக்கும் நோக்கத்தில் 19வது அரசியல் திருத்தம் தயாரிக்கப்படுமென இந்த அரசாங்கத்தின் தலைவர்கள் வாக்குறுதியளித்திருந்தனர்.

ஆரம்பத்தில், ஜனாதிபதித் தேர்தலின்போது இவர்கள் கூறினார்கள், அரசசேவை, பொலிஸ், நீதித்துறை போன்றவற்றில் காணப்படும் பிரச்சினைகளுக்குக் காரணம், அவை அரசியல்மயமாவதுதான் என்று. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக சுயாதீன ஆணைக்குழுக்களை முன்வைத்தது அதற்காகத்தான். இவ்வாறான அரச நிர்வாக சேவைகள் அரசியல் இயந்திரத்தின் கைப்பாவைகளாக இருப்பதுதான் பிரச்சினை என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் அதிகார இயந்திரத்தை வலுப்படுத்துவதனூடு மக்கள் நலன் உறுதி செய்யப்படமாட்டாது. உதாரணத்திற்கு பொலிஸ் சேவையை எடுத்துக் கொள்வோம். பொலிஸை வழிநடத்தும் பொறுப்பு அதிகாரிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும், பொலிஸ் தொழிலின் தன்மை உறுதி செய்யப்படுவதில்லை. இந்த முறையின் கீழ் பொலிஸ் என்பது அரசின் தேவைகளை பிரதிநிதித்துவம் செய்வதோடு, அதன் தீர்மானங்கள் அரசியலால் வடிகட்டப்படுகின்றன. உதாரணமாக இரு வாரங்களுக்கு முன்னர் முன்னிலை சோஷலிஸக் கட்சியின் உறுப்பினரொருவரை போஸ்டர் ஒட்டியமைக்காக பொலிஸார் கைது செய்கின்றனர். மக்களை போராட வருமாறு அழைப்பு விடுக்கும் வாக்கியங்கள் அடங்கிய அந்த போஸ்டர் முன்னிலை சோஷலிஸக் கட்சியால் அச்சடிக்கப்பட்டிருந்தது. போஸ்டர் ஒட்டியவர் சுற்றாடல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். டியூஷன் வகுப்புகளுக்கான போஸ்டர்கள், வியாபார விளம்பர போஸ்டர்கள், தேர்தலில் வாக்களித்தவர்களுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் அரசியல்வாதிகளால் ஒட்டப்பட்ட போஸ்டர்கள் போன்ற பல வகைப்பட்ட போஸ்டர்கள் ஒட்டும்போது தடுக்காத பொலிஸார், முன்னிலை சோஷலிஸக் கட்சியின் போஸ்டரை மாத்திரம் ஒட்டியதற்காக சுற்றாடல் பிரச்சினையை காரணம் காட்டி கைது செய்வது அரசியல் அடாவடித்தனமாகும். அவ்வாறான அரச நிறுவனங்களில் அதிகாரித்துவ இறையாண்மையை ஏற்படுத்துவதால் மாத்திரம் ஜனநாயகம் கிடைத்துவிடாது. என்றாலும், இவற்றை அரசியலிலிருந்து பிரித்து சுயாதீன ஆணைக்குழுக்கள் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக ரணில்- மைத்திரி மற்றும் அவர்களோடு ஒத்தூதியவர்கள் கூறினர். ஆனால் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது?

19வது அரசியல் திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட அரசியலமைப்புச் சபை பத்து பிரதிநிதிகளை கொண்டதாக இருக்கும். உத்தியோகரீதியில் நியமனமாகும் சபாநாயகர் அதன் தலைவராக செயற்படுவதுடன், பிரதமரும் எதிர்க்கட்சி தலைவரும் உத்தியோகரீதியில் நியமனமாவர். மேலும், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவரால் தமது பிரதிநிதிகளாக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரை நியமிக்க முடியும். பிரதமரும், எதிர்க்கட்சி தலைவரும் பிரதிநிதித்துவம் செய்யாத கட்சிகளை சார்ந்த ஒரு பிரதிநியை உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்கின்றனர் இதன்படி, அரசியலமைப்பு சபைக்கு தெரிவாகும் உறுப்பினர்கள் பத்துப் பேரில் ஏழுபேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகும். தவிரவும், சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் மூவர் நியமிக்கப்படுவதோடு, அவர்களின் பெயர்கள் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். அந்த அனைத்து திருத்தங்களின் பின்னர் 19வது அரசியலமைப்பு திருத்தம் இப்படித்தான் இருக்கும். இவ்வாறு நியமிக்கப்படும் அரசியலமைப்புச் சபை சார்ந்து எழுந்திருக்கும் பிரச்சினைகள் மீது சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனம் சவாலுக்கு உட்படுத்தப்படக்கூடிய சாத்தியங்களும் உள்ளன. மைத்திரிபாலாக்கள் மற்றும் ரணில்கள் உள்ளிட்ட நல்லாட்சி புத்திசாலிகள் கூறிய மற்றும் செய்தவற்றிற்கிடையில் காணப்படும் இடைவெளி குறித்து சற்று அலசுவோம்.

## அரசியலமைப்புச் சபையின் கேலிக்கூத்து

முந்தைய 17வது அரசியலமைப்பு திருத்தத்தின்படி, அரசியலமைப்புச் சபையில் பத்து உறுப்பினர்கள் இருந்ததுடன், அவர்களில் ஐவர் எந்த அரசியல் கட்சியினதும் உறுப்பினரல்லாத சிவில் சமூக பிரதிநிதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் முக்கிய நோக்கமானது, நாட்டின் அரச இயந்திரம் அரசியல் சார்பற்றதாக இருக்க வேண்டும் என்பதுதான். என்றாலும், 18வது அரசியலமைப்பு திருத்தத்தின் வாயிலாக அரசியலமைப்புச் சபை குப்பைத்தொட்டியில் வீசப்பட்டு அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதியின் தனி அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 18வது அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் நீக்கப்பட்ட ஒதுக்கீடுகளை மீண்டும் சட்டபூர்வமாக்குவதற்காகவே 19வது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால் நடந்தது அதுவல்ல. இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள 19வது அரசியலமைப்பு திருத்தத்தின்படி, அரசியலமைப்புச் சபையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஐந்து பிரதிநிதிகள் இருத்தல் வேண்டுமென்ற ஆரம்பவிதிகள் மாற்றப்பட்டு மூன்று பேராக குறைக்கப்பட்டுள்ளது. ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதன் உறுப்பினர்களாக இருக்கும் நிலையில் அச்சபையின் நோக்கமே மாறி, அது, மீண்டும் தனியார்மயப்படுத்தப்பட்ட இடமாகிறது. அதேபோன்று, 41 (அ) (5) உறுப்புரையின் கீழ் அரசியலமைப்புச் சபைக்கு நியமிக்கப்படும் மூவரின் பெயர்கள் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். எனவே, அந்த மூவரை தீர்மானிக்கும், கட்டுப்படுத்தும் அதிகாரம் மறைமுகமாக அரசியல் இயந்திரத்திடமே செல்கின்றது. சிவில் சமூக பிரதிநிதிகள் குறித்தும் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். 17வது அரசியலமைப்பு திருத்தத்தினை போன்று சிவில் சமூக பிரதிநிதிகள் ஐந்து பேர் இருந்தால் சுவர்க்கம் கண்ணெதிரே வந்துவிடுமென சிலர் நினைக்கிறார்கள். நாம் அப்படி நினைக்கவில்லை. இம்முறை நியமிக்கப்பட்டுள்ள மூன்றுபேரும் மேட்டுக்குடி மற்றும் மத்தியதர வர்க்கத்தின் மேல்தட்டை பிரதிநிதித்துவம் செய்வோர்களாகும். அவர்கள் ஒருபோதும் சிவில் சமூக பிரதிநிதிகளல்ல. அவர்களால் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கவும் முடியாது. இவ்வாறான அமைப்புகளுக்கு அரசியல்வாதிகள், குறைந்தபட்சம் தமக்கு அரசியல்ரீதியில் இசைவான சமூக செயற்பாட்டாளர்களையாவது பயன்படுத்துவதில்லை. இப்படியானவர்களைத்தான் அவர்கள் பயன்படுத்துவார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்போர் இந்த முறையை நடாத்திச் செய்வதற்கான உயிரணுக்களாக இருப்பதுடன், இந்தப் போலி சிவில் சமூக பிரதிநிதிகள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவார்கள் என நாம் நம்பப்போவதில்லை. ஆகவே செய்ய வேண்டியது என்னவென்றால், சிவில் சமூகத்தை வலுப்படுத்தி, அதன் அபிலாஷைகளை அரசியல் மேடைகளில் ஆதிக்கம் செலுத்தச் செய்ய வேண்டும். அதை விடுத்து, சிவில் சமூக மேட்டுக்குடி செயற்பாட்டாளர்களை அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருப்பதல்ல.

அதன்படி, அரசசேவை, பொலிஸ், நீதித்துறை உள்ளிட்ட துறைகளில் ஒப்பீட்டளவிலான சுயாதீனத்தை உறுதி செய்யாது, அவை, வேறுவழியில் அரசியல் இயந்திரத்தின் கைப்பாவைகளாக ஆக்கப்பட்டுள்ளன. இம்முறை நாடாளுமன்றத்தில் இந்நிலை மேலும் மோசமடைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் உத்தியோகரீதியில் கூட்டு சேர்ந்துள்ளதுடன், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியன கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அந்த கூட்டமைப்பிலே இணைந்தது, இப்போது ஆட்சிக்கு மறைமுக ஒத்துழைப்பு வழங்குகிறது.

நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனியாக பார்ப்போம். கரு ஜயசூரிய, ரணில் விக்ரமசிங்க, சம்பிக ரணவக்க, விஜேதாச ராஜபக்ஷ, ஜோன் சௌவிரத்ன ஆகிய ஐவரும் அரசாங்கத்தை சார்ந்தவர்கள். எதிர்க்கட்சிக்காக என்ற வகையில்

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

# சிந்தனை முரண்பாடும் அதன் அரசியல் வெளிப்பாடும்



இலங்கையில் ஒரு புதிய வகையான(தேசிய) அரசு அமைக்கப்பட்டுள்ளது. நாட்டில் «நல்லாட்சி» வேண்டி மக்கள் அளித்த தீர்ப்பின் பின்னணியுடன் இது உருவாகியுள்ளது. நாட்டின் ஜனாதிபதி உட்பட (1 சக 225) 226 பேர் உள்ளடங்கிய இந்த அரசாங்கத்தில் உள்ளவர்களின் தராதரங்களையும்-அனுபவங்களையும் தேசிய அரசு கட்டமைக்கப்பட்டுள்ள முறைமையையும் கணிப்பீடு செய்து பார்க்கும் போது ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. இந்த அரசினால் நாட்டின் குடிமக்களுக்கு எந்தவித நற்பயனும் ஏற்படப் போவதில்லை என்பதுதான் அந்த ஒன்றாகும்.

இந்தச் சூழலில் நல்லாட்சிக்கு ஆதரவு அளித்தபடி தமிழர்களின் துயர் களைவோம் எனக் கூறி வாக்குக் கேட்டவர்களை பெரும்பான்மையாகத்(16 பேரை) தமது பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்துள்ளனர் தமிழர்கள். ஆனால் தமது பிரதிநிதிகள் தங்களுக்கு எதனையும் பெற்றுத் தரமாட்டார்கள் என்பதை நன்கு புரிந்து கொண்டபடிதான் தெரிவு செய்துள்ளார்கள். காரணம் தமிழர்களின் தாகமான தமிழரசுக்குச் சொந்தக்காரர் இவர்கள்தான் என்பதே.

அப்படியானால் தமிழர்கள் என்ன முட்டாள்களா என எவரும் கேட்கலாம். அதற்கான பதிலைத் தேடவேண்டிய கட்டாயத்திற்கு நாம் இன்று தள்ளப்பட்டுள்ளோம். இதற்கான பதில் எங்கள் ஒவ்வொருவருடைய மனதிற்கும் பூரணமாகத் தெரியும். வெளியாரிடமிருந்து நாம் விளக்கம் பெறத்தேவையில்லை.

எமது கடந்தகாலத்தை நாமே மீட்டெடுத்துப் பார்ப்பதன் ஊடாகவும் எமது சிந்தனை முறைமையையும் அதனையொட்டிய செயற்பாட்டையும் நாமே பரிசீலித்துப் பார்ப்பதன் ஊடாகவுமே இந்தப் பதிலைக் கண்டடைய முடியும். இதற்கு வேறெந்தவிதமான படிப்புத் தகைமைகளோ அன்றி பக்கத் துணைகளோ தேவையில்லை.


இலங்கையில் அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் கால் பதித்தபோது எமது தமிழ் சமூகம் பிளவுபட்டு ஒன்றை ஒன்று அடக்கி வாழ்ந்தபடிதான் இருந்தது. இந்த நிலைமையை ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். அதற்கேற்றவாறே கல்வி நிறுவனங்களையும் கற்பித்தல் முறைமையையும் உருவாக்கினர்.

இலங்கையின் கல்வி முறையால் நாடும் நாட்டின் மக்களும் பயன் அடைந்ததை விட வெளிநாடுகளும் ஒரு சில உள்நாட்டு மூலதன முகவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும்தான் இன்றுவரை பயன்பெற்று வருகின்றனர். இதில் இன வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

எமது கல்வி, நாட்டை நேசிக்கும்படியோ அன்றி எம்மைச் சுற்றியுள்ள மக்கள் சமூகத்தைப் பற்றிக் கரிசனை கொள்ளும்படியோ எமக்கு கற்றுத் தரவில்லை. மாறாக அடுத்தவனை எப்படி ஏறி மிதித்து விட்டு நான் மட்டும் வாழலாம் என்பதைத்தான் கற்பித்து வருகிறது.

நீதிக் கதைகளையும் சமய போதனைகளையும் கற்றுக்கொண்ட நாம் நான்-எனது என்று வருகிறபோது எதையும் எப்படியாவது செய்து நான் மட்டும் தப்பித்துக் கொள்வதையே வாழும் முறையாக கடைப்பிடித்து வருகிறோம். ஒரே ஊரில் பிறந்து வளர்ந்து அதே ஊர் பாடசாலையில் ஒன்றாகப் படித்திருந்தாலும் போட்டியும் பொறாமையும் படைத்த மனிதர்களாகவே நாம் விளங்குகிறோம்.

**இதில்தான் எமது ஒற்றுமையின் உள்ளரங்க தாற்பரியம் அடங்கியுள்ளது. எங்களுக்குள்-தமிழர்களுக்குள் ஒற்றுமையின் கட்டுமானம் எமது ஊரில் இருந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஊர் மானம் காக்க நாம் ஒன்றுபட்டு அடுத்த ஊரவருடன் அடிபடுவோம். அப்போது சாதி-சமய பேதங்களை ஒத்தி வைப்போம். அதே அடிப்படையில் சாதியைப் பேண-சமயத்தைக் காக்க ஊரைக் கூறு போட்டு சாதித் தமிழராகவும் சமயத் தமிழராகவும் அணிகட்டி நின்று மோதுவோம். அதேபாணியில்தான் நாம் தமிழர்கள் என்று வரும்போதும் ஒன்றுபட்டு நின்று வோட்டுப் போடும் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கிறோம்.**



பணம் ஒன்றை மட்டும் குறியாக வைத்தே தமிழர்களின் மனோபாவம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியுடன்தான் இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்கள் அன்று தங்கள் அரசியல் பயணத்தைத் தொடங்கினார்கள். தொடர்ந்தார்கள். இன்றும் தொடருகிறார்கள்.

1977 தேர்தலில் தமிழீழ சோசலிசக் குடியரசுக் கோரிக்கைக்காக வோட்டுப்போட்ட நம்மில் பெரும்பாலானோர் (10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர்) நாட்டைவிட்டு ஓடிவிட்டனர். நாட்டில் வாழும் நம்மில் அரைப் பங்கினர்(15 இலட்சத்திற்கும் மேற்பட்டோர்) வட-கிழக்குக்கு வெளியே வாழ்கின்றனர். இந்நிலையில் அடுத்த ஓராண்டுக்குள் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவோம் என்று வாக்குறுதி வழங்கியவர்களைத் தமிழர்களாகிய நாம் நாடாளுமன்றக் கதிரைகளில் இன்று அமர வைத்துள்ளோம்.

முப்பதாண்டு கால உக்கிரமிக்க ஆயுதப் போராட்டத்தாலும்-உலகளாவிய ஆர்ப்பாட்டங்கள் நிறைந்த பிரச்சாரங்களினாலும் பெற்றுக்கொள்ள முடியாத எமது உரிமைகளை எமது பிரதிநிதிகள் இன்றுபெற்றுத் தருவார்கள் என்று நம்புவதற்கு நாம் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. இலங்கையில் தமிழர்களை-தமிழர்களின் தனித்துவத்தை-தமிழர்களது வீரத்தை அவர்கள் அடையாளப்படுத்தி நிற்பதனாலேயே அவர்களை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம்.

இதில்தான் எமது ஒற்றுமையின் உள்ளரங்க தாற்பரியம் அடங்கியுள்ளது. எங்களுக்குள்-தமிழர்களுக்குள் ஒற்றுமையின் கட்டுமானம் எமது ஊரில் இருந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஊர் மானம் காக்க நாம் ஒன்றுபட்டு அடுத்த ஊரவருடன் அடிபடுவோம். அப்போது சாதி-சமய பேதங்களை ஒத்தி வைப்போம். அதே அடிப்படையில் சாதியைப் பேண-சமயத்தைக் காக்க ஊரைக் கூறு போட்டு சாதித் தமிழராகவும் சமயத் தமிழராகவும் அணிகட்டி நின்று மோதுவோம். அதேபாணியில்தான் நாம் தமிழர்கள் என்று வரும்போதும் ஒன்றுபட்டு நின்று வோட்டுப் போடும் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கிறோம்.

எமது தமிழ் பாரம்பரியத்தில் வெள்ளைக்காரன் எழுதி வழங்கி இன்றுவரை அமுலில் இருக்கும் தேசவழமைச் சட்டம் போன்று தமிழர்களின் நீதி நியாயங்களும் தனித்துவமானவை. தமிழர்களுக்குள் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் சகலவகையான பாகுபாடுகள் யாவும் தேசவழமைக்கு உட்பட்டவையாகும். இதுவரை தமிழர்களுக்குள் இடம்பெற்ற தனிநபர் கொலைகள்-கூட்டுக் கொலைகள்-இயக்கப் படுகொலைகள் யாவும் தமிழர் சமூகத்தைப் பொறுத்தவரை நீதியானதும் நியாயமானதுமாகும். இதிலும் தமிழர்கள் நாம் ஒன்றுபட்டே நிற்கிறோம்.

சிங்களவர்கள் எல்லைகளில் நிலங்களை அபகரிக்கிறார்கள் என்று கூறிக்கொண்டே நாம் அடுத்த காணிக்குள் வேலிக்கதியாலை தள்ளி நட்டு அடுத்த சக தமிழனின்-எமது உறவினரின் காணியை அபகரித்தோம். வேலிச் சண்டையில் கொலையும் செய்தோம். கோடேறி வழக்காடினோம். பின்பு ஊரே இல்லாமல் அகதிகளானோம். இன்று மறுபடி ஊர் திரும்பியதும் கள்ள உறுதி எழுதிக் காணிகளை கைப்பற்றும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளோம்.

அதேவேளை சிங்கள அரசபடைகளினால் தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட யுத்தக்குற்ற மீறல்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதிலும் தமிழர்கள் நாம் ஒன்றுபட்டு நிற்பதனாலேயே அதனை தூக்கிப் பிடிக்கும் பிரதிநிதிகளை பெரும்பான்மையாக இந்த முறையும் தெரிவு செய்துள்ளோம்.

ஆனால் சிங்கள அரசும் அதன் அரச படைகளும் சம்பந்தப்படாமல் வடக்கு கிழக்கில் தமிழராகிய எம்மத்தியில் காணாமல் போன-கடத்தப்பட்ட-கொல்லப்பட்ட சம்பவங்கள் குற்றச் செயல்களாக எமக்குத் தென்படவில்லை. அதனால்தான் அன்று அக்குற்றங்களுக்கு பின்னூட்டம் வழங்கியவர்களையே எமது பிரதிநிதிகளாகத் இன்று தெரிவு செய்துள்ளோம்.

இன்று செயற்படத் தொடங்கியுள்ள தேசிய அரசாங்கம் இலங்கையின் இனச் சமன்பாட்டின் ஒரு தரவின் அடிப்படை காரணமாகவே சாத்தியமாகியுள்ளது. வட-கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் வாக்குப் பலத்தினாலேயே அது சாத்தியமாகியுள்ளது. அந்த (தென்னிலங்கைத்) தமிழர்கள் «தமிழரசு» பற்றியோ-»சமஸ்டி» பற்றியோ அன்றி «யுத்த விசாரணை» பற்றியோ சிந்தித்து வாக்குப் போடவில்லை. ஆட்சிமாற்றம் வேண்டியே வாக்களித்துள்ளனர்.

உலகத்தில் மக்களால் மக்களுக்காக மக்களைக் கொண்டு நடாத்தப்பட்ட போராட்டங்கள் யாவும் இறுதியில் வெற்றியீட்டியுள்ளன. தமிழராகிய நாம் கடந்த 67 வருடங்களாக பார்வையாளர்களாக இருந்து வருகிறோமே தவிர எமது அரசியல் போராட்டத்தில் பங்குதாரராக இருந்ததில்லை.

தமிழர்கள் தங்களது சிந்தனையில் «நான்-என்றை குடும்பம்- என்றை வீடு-என்றை காணி- என்றை சாதி-என்றை சமயம்-என்றை கோயில்-என்றை பள்ளிக்கூடம்-என்றை ஊர்» என்று கணக்குப் போட்டபடி அரசியல் பயணம் செய்யும் வரை ஆள்வதற்கென்றே பிறந்த மேலாதிக்கவாத மேட்டுக்குடித் தலைமைகள் தொடர்ந்தும் பிழைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு வாக்களித்த மக்கள் அவர்களது ஏகபோக பிரதிநிதிகளால் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுவார்கள்.தெரிவு செய்யும் எமது பிரதிநிதிகளாவது உண்மையின் பக்கம் நின்று உழைப்பவர்களா என சீர்தூக்கி பார்ப்பதே நாம் தலை நிமிர்ந்து செயற்பட உதவும்.தீர்மானம் எடுக்கும் உரிமை உங்கள் கைகளில்.




படிப்பகம்

# காலனித்துவம் தந்த கல்வி முறைமையும் குடிமக்களின் அடிமைத்தனப் போக்கும்

இலங்கையில் ஒரு புதிய அரசியலமைப்பு யாப்பு எழுதுவதற்கான ஆரவாரங்கள் தொடங்கியுள்ளன. இந்தப் புதிய யாப்பு ஏன்? எதற்காக? எப்படி? வரைய வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதும் யாருக்காக? யாரால்? அது எழுதப்படல் வேண்டும் என்பதும் ஒரு ஜனநாயக நடைமுறையின் கீழ் கேட்கப்பட வேண்டிய முக்கிய கேள்விகளாகும்.

கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்ட யாப்புக்கள் யாவுமே இலங்கை மக்களின் கருத்தறியாமல் பெரும்பான்மையின மேட்டுக்குடி ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளின் விருப்பு வெறுப்புக்கு அமைவாகவே எழுதப்பட்டன. இந்தத் தடவையும் முன்னர் போல் மேட்டுக்குடியினர் நாட்டு மக்களின் கருத்தை நாடாமல் தாங்களே புதிய யாப்பினைத் தயாரிக்கும் முனைப்புடனேயே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் யாப்பு பற்றிய கலந்துரையாடலை இன்று குடிமக்கள் மத்தியில் நடாத்தினால் அவர்கள் எடுக்கும் முடிவு அவர்கள் கற்ற கல்வியின் அடிப்படையிலேயேதான் அமைந்திருக்கும். அதனடிப்படையில் பார்ப்போமானால் மக்கள் இன-மத-சாதி-பால்-வர்க்க பிரிவுகளின் கீழ் நின்றுதான் கருத்தை முன் வைப்பார்களேயொழிய இலங்கை-இலங்கையர் என்ற சிந்தனையுடன் யாப்பை நோக்கமாட்டார்கள். காரணம் அவர்களுக்கு ஊட்டப்பட்ட கல்விமுறையேயாகும்.



இலங்கையிலிருந்து காலனித்துவ எசமானர்கள்தான் வெளியேறினார்களேயொழிய காலனித்து சுரண்டல் நடைமுறை நிறுத்தப்படவில்லை. அது இன்றுவரை தொடர்ந்தபடிதான் உள்ளது. ஆங்கிலேயர் உருவாக்கி விட்டுச் சென்ற கல்வி முறைமையில் வளர்க்கப்படும் மக்கள் அந்நியருக்கு-ஆங்கிலேயருக்குப் பணிவிடை புரிந்து பரவசம் அடைவதையே வாழ்க்கையின் லட்சியமாக கருதும் மனோபாவம் கொண்டு நாட்டின் வளங்கள் சுரண்டப்படுவதற்கு துணையாக செயற்பட்டு வருகின்றனர்.

காலனித்துவ காலம் முதற் கொண்டே கல்வியில் முன்னேற்றம் பெற்றிருந்த தமிழர்கள் வாழும் வட கிழக்குப் பிரதேசங்கள் இதுவரை அடைந்த முன்னேற்றம் யாது? அல்லது அப்பகுதி பாமர பாட்டாளி மக்கள் பெற்ற நலன்கள் யாவை? இலங்கையின் இலவசக் கல்வி பயின்று பட்டம் பெற்ற பின் அந்நிய நாடுகளுக்குச் சென்று «தானுண்டு தன் குடும்பம் உண்டு» என வாழ நினைத்தார்களே அன்றி தனது சமூகத்தையோ-தான் சார்ந்த மக்களையோ பற்றி சிந்திக்கவில்லை. தங்களது திறமைகளை அந்நியருக்கே பயன்படுத்தினர். இப்படியான ஒரு மனோபாவத்தை வளர்க்கும் கல்வித் திட்டமே இன்று வரை நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது.

உலகத்தில் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட நாடுகளின் ஆட்சியாளர்கள் இந்த அடிமைத்தன மனோபாவத்தை வளர்க்கும் கல்வித் திட்டத்தின் ஊடாக தங்களது சொந்த நாட்டின் வளங்களை அந்நியருக்கு தாரை வார்த்துக் கொடுப்பதற்காக சொந்த நாட்டு மக்களை பிரித்து வைத்து ஒருவருக்கொருவர் மோத விட்டு தாங்கள் மட்டும் சுகபோக வாழ்வை அனுபவித்தபடி உள்ளனர்.

இலங்கையின் கல்வித் திட்டம் மக்களை சமூக சிந்தனை அற்றவர்களாகவே உருவாக்கி விட்டுள்ளது. சமூக சிந்தனையற்ற மக்கள் ஒருபோதும் சுதந்திரம் படைத்தவர்களாக வாழமுடியாது. எமது நாட்டில் சமூக சிந்தனையென்பது இன-மத-சாதி-பால் என்ற அடித்தளத்துடன் மட்டுமே வளர்த்தெடுக்கப்பட்டு வருவதற்கான கல்வி முறைமையே நடைமுறையில் உள்ளது. நாம் பெற்ற கல்வி எமக்கு «தேசப்பற்று» என்பதை «தேசத்தை விற்றுப் பிழை» என்பதாகவே அர்த்தப்படுத்தியுள்ளது. «சுதந்திரம்» என்பதை «அயலவனை சுரண்டிப் பிழை» என்றே வலியுறுத்தி நிற்கிறது.

நாம் பெற்ற கல்வி நமது மக்களுக்குப் பயன்படவில்லை. நமது திறமைகள் நமது மக்களுக்கு கை கொடுக்கவில்லை. ஆனால் அக்கல்வி எமது மக்களை உறவு-ஊர்-சாதி-சமயம்-இனம்-நாடு என்ற வரையறைக்குள்ளும் பிளவுகளை உருவாக்கி வைத்துக் கொண்டு எம்மை அடுத்தவர் தயவிலும் அந்நியர் உதவியிலும் வாழ வேண்டிய அடிமைகளாக்கி விட்டுள்ளது.

ஆங்கிலேயர் இலங்கையில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த காலத்திலேயே அதாவது 1920 களிலேயே 'அவர்களுடைய கல்வித் திட்டம் மக்களை அடிமைகளாக வளர்க்கும் திட்டம்» எனவும் 'அது மாற்றியமைக்கப்படாத வரைக்கும் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்காது» என்றும் 'யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ்» வலியுறுத்தி இன-மத-சாதி-பால் வேறுபாடு கடந்து அறிஞர்களை ஒன்று கூட்டி வைத்துப் பல மாநாடுகளை நடாத்தியது. ஆனால் அன்று அதிகாரத்தை கையில் வைத்திருந்த அடிமைக் கல்வி பெற்ற மேட்டுக்குடிகள் அதனை உதாசீனம் செய்ததால் நாட்டில் இரத்த ஆறுகள் பல நாம் கடக்க வேண்டியதாயிற்று.

ஆயினும் கடந்த கால அனுபவங்களின் பின்பும் கூட நமக்கு «அறிவு»க் கண் திறக்கவேயில்லை. அதற்கான கல்வி எமக்கு வழங்கப்படவேயில்லை. எனவேதான் ஆங்கிலேயர் போய் 67 ஆண்டுகள் கழிந்தும் மீண்டும் இன்று அந்நிய ஆதிக்க சக்திகளை வெற்றிலை பாக்கு தேசிக்காய் தட்டு வைத்து ஆலாத்தி செய்து வரவேற்று உபசாரம் பண்ணிக் கொண்டிருக்கிறோம்.

ஆணுக்குப் பெண் அடிமை - கணவனுக்கு மனைவி அடிமை - பெற்றோருக்குப் பிள்ளை அடிமை - மூத்தவருக்கு இளையவர் அடிமை - சமயங்களுக்கு பக்தர்கள் அடிமை - ஒரு சாதிக்கு இன்னொரு சாதி அடிமை - பதவியில் உள்ளவர்களுக்கு பாமர பாட்டாளி மக்கள் அடிமை. இவைகள்தான் நாம் பெற்ற கல்வியின் பயன்.

இலங்கையில் அமைதியும் சமாதானமும் சுபீட்சமும் உருவாக வேண்டுமானால் தொழில்சார் தகைமைகள் மட்டுமல்லாது கூடவே சமுதாய நோக்குடைய சிந்தனையாளர்களையும் சமூக அக்கறை கொண்ட அறிஞர்களையும் உருவாக்கும் ஒரு கல்வித் திட்டம் அமைக்கப்படல் வேண்டும். இதனைக் கருத்தில் கொள்ளாமல் அதனைப் புறந் தள்ளிவிட்டு நடைமுறைப்படுத்தப்படும் எந்த விதமான மாற்றங்களும் நாட்டையும் அதன் குடிமக்களையும் மேலும் மேலும் அழிவுப் பாதையிலேயே இட்டுச் செல்லும்.

"படிச்சவன் சூதும் வாதும் பண்ணா
போவான் போவான்...
அய்யோன்னு போவான்" (பாரதியார்)

பாரதி இப்படி சூதும் வாதும் செய்த இரண்டு படித்தவர்களைப் பற்றித் தான் இந்தப் பதிவு.

---

## எதிர்க்கட்சித் தலைவரும்

7ம் பக்க தொடர்ச்சி

தலைவருக்கு நீட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கையின் பெரும்பான்மையின சிங்கள மக்களை அணுகி அவர்களுக்கு " நாட்டின் மொத்த நலன் தமிழ் மக்களின் பிரச்சனைக்கான தீர்விலேயே தங்கியுள்ளது" என்பதைப் புரிய வைத்து அவர்களின் சந்தேகங்களை நீக்குவதற்குமான நல்லதொரு வாய்ப்பும் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கிடைத்துள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் பற்றிய பயத்தைக் காட்டியே இதுவரை மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றி வந்த இனவாதக் கட்சிகள் இரண்டும் இன்று இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவியுள்ளனர். அதேவேளை சிங்கள மக்களில் சரிபாதியினர் 2009ல் இனப்பிரச்சனைக்கான தீர்வு எட்டப்பட்டுவிட்டதாக கருதுவதனை வலியுறுத்தியே கடந்த தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

நாட்டை ஆள்வதற்கான அதிகாரம் தவிர ஒரு பிரதமருக்குரிய அந்தஸ்தும் சகல வசதி-வளங்களும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் உண்டு. அந்த வசதி-வளங்களை தமிழ் மக்களின் நலன் கருதி சிங்கள மக்களின் இதயங்களை வென்றெடுக்கும் வகையில் பயன்படுத்தவேண்டிய கடமையும் கட்டாயமும் இவருக்கு உண்டு. "அதிகார மட்டங்களில் மட்டும் பேசித் தீர்க்க முடியாதது இந்த இனப்பிரச்சனை" என்பதும் "அடுத்தவரை-அந்நியரை நம்பினால் இலங்கையின் இந்த இனப்பிரச்சனை தீராது" என்பதும் கடந்தகால கசப்பான அனுபவங்கள் எமக்குக் கற்றுத் தந்திருக்கும் படிப்பினையாகும்.

கடந்த 68 வருடங்களாக தமிழர்களாகிய நாம் "பழிக்குப் பழி வாங்கும்" அரசியல் பாதையிலேதான் நடந்து வந்துள்ளோம். அதனால் இன்றுவரை அழிந்தது நாங்களே. இனியும் தொடர்ந்து அதேபாணியில் அரசியல் செய்வதற்கு ஊக்கங்களும் முன்னெடுப்புகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் இதனை மனதில் நிலைநிறுத்திச் செயற்படவேண்டிய பாரிய பொறுப்பு அவருக்கு உண்டு.

நீதிக்கான கோரிக்கைகளும் அநீதி இழைத்தவர்களுக்கான தண்டனை கோருதலும் தமிழர்களுக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. சிங்கள மக்களுக்கும் அதில் பங்குண்டு. நீதி அனைவருக்கும் ஒன்றே என்பதன் அடிப்படையில் சிங்கள - தமிழ் மக்களை இணைக்கக் கூடிய முக்கிய பாத்திரமும் பதவியும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருக்குக் கிடைத்துள்ளது.

இனப் பிரச்சனையைக் காட்டியே சிங்கள தமிழ் மக்கள் மட்டுமல்ல மலையக - முஸ்லீம் மக்களினதும் அத்தியாவசிய - அடிப்படை வாழ்வாதாரங்கள் படிப்படியாக மறுக்கப்பட்டு வருகின்றன. கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், அடிப்படை உரிமைகள், பெண்கள் பாதுகாப்பு, சிறுவர் பராமரிப்பு யாவற்றிலும் சகல பிரிவு மக்களும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டே வருகின்றனர்.

எனவே நீதி-உரிமை என்ற கோரிக்கைப் போர்வையில் நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்கும் அரசியலுக்கும் ஒரு முடிவு காணவேண்டிய பொறுப்பும் எதிர்க்கட்சித் தலைவருக்கு உண்டு.

இந்தவகையில் நாட்டின் புதிய தேசிய அரசாங்கம் உறுதியளித்த நல்லாட்சி நடைமுறையில் அது முன்னேறிச் செல்வதற்கான பயணத்தில் அனைத்துப் பிரிவு மக்களையும் ஒன்றிணைத்து மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் எதிர்க்கும் அதேவேளையில் நாட்டில் நீதி, நியாயம், சமாதானம், அமைதி, நல்வாழ்வு நிலவ அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பையும் வழங்குவதன் ஊடாகவே எதிர்க்கட்சித் தலைவர் கடந்த தேர்தல் காலத்தில் "ஒரு வருடத்தில் தமிழர்களின் உரிமைகளை மீட்டுத் தருவேன்" என்ற வாக்குறுதியை அவரால் நிறைவேற்ற முடியாமற் போனாலும் அதனை நோக்கி நடை போட்டேன் என்ற பெருமையாவது அவருக்கு மிஞ்சும்.

"மாண்பு மிகு சபை உறுப்பினர்களையும், நாட்டின் குடிமக்களையும், ஒருவருக்கொருவர் மீதான பரஸ்பர சந்தேகத்தையும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நார்நாராக கிழிபடுவதையும் விடுத்து ஒருவர் மற்றவருடன் ஆக்கபூர்வமான கூட்டுறவில் இணைந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். அது எம்மை ஒரு பொற்காலத்திற்கு இட்டுச் செல்லும் என நம்புகிறேன்". (1936ல் அரச சபையில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆற்றிய உரையிலிருந்து)

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# உரிமைக் கோரிக்கைக்குள் ஒடுக்கப்படும் பெண்கள்




இலங்கையில் கடந்த 68 வருடங்களாக சிறுபான்மை இனத்தவராகிய தமிழர்கள் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களால் அடக்கியொடுக்கப்பட்டு அடிமைகளாக நடாத்தப்பட்டு வருவதாக கதையாடல் செய்யப்பட்டு நம்ப வைக்கப்பட்டு அதனடிப்படையில் தமிழர்களுக்கான உரிமைகளுக்காக ஓர் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு அது முடித்து வைக்கப்பட்டு மறுபடி மீண்டும் இன்று அதே கதையாடல் தொடங்கியுள்ளது.

இந்தக் கதையாடலில் யார் எவருடைய உரிமைகளை மறுக்கிறார்கள், யார் எவருடைய உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள், கோஷமிடப்படும் இந்த ‘உரிமைகள்» பற்றிய வரைவிலக்கணம் என்ன என்பவை தொடர்பாக ஆராயவேண்டிய அவசியம் பெண்களாகிய எமக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

இதற்கான காரணம் பெண்களாகிய எமக்கு இன்று ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற-பயந்த-அடிமைத்தன வாழ்வுநிலையே. தமிழர்களில் பெரும்பான்மை மக்களாகிய நாம் சிறுபான்மையினரான ஆண்களால் அடிமைப்படுத்தப்பட்டு ஆளப்பட்டு வருகிறோம். தமிழர்களது அரசியல், ஆணாதிக்க ஆளும் வர்க்கத்தினரின் அரசியலாகத்தான் அன்று முதல் இன்று வரை செயற்பட்டு வருகிறது.

குடும்பத்திலிருந்து சமயம்-சம்பிரதாயம்-ஊர்வழமை என ஆரம்பிக்கப்படும் எங்கள் மீதான அடக்குமுறைகள் காலங்காலமாக பரம்பரை பரம்பரையாக அரசியல்-அரசாங்கம் என்பவற்றினூடாக கட்டமைக்கப்பட்டு வருகிறது. எமது உறவுகளும்-சமூக வட்டங்களும் நாட்டின் சட்டதிட்டங்களும் பெண்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே நடாத்தி வருகின்றன. குடும்ப வாழ்விலும் சரி பொது வாழ்விலும் சரி பெண்கள் ஆண்களின் பகடைக்காய்களாகவே பாவிக்கப்பட்டு வருகின்றனர்.

ஒரு காலத்தில் பெண்கள் சைக்கிள் ஓட்டியபோது அவர்களைத் தவறாகக் கணிப்பிட்ட எமது அதே சமூகம் பிற்காலத்தில் அவர்களை ஆயுதம் ஏந்த வைத்துப் பார்த்துப் பெருமிதம் அடைந்து பின்னர் இன்று அவர்களை சமூகக் கேட்பாரற்ற அனாதைகளாக்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் ஆதிமூலம் எமது சமூகத்தில் எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆணாதிக்க ஆளும் வர்க்க அதிகாரமே. இவர்களின் கைகளில்-கட்டுப்பாட்டில் தமிழர்களின் அரசியல் வழிகாட்டல் இருக்கும் வரை பெண்கள் மீதான சகல ஒடுக்குமுறைகளும் தொடரவே செய்யும்.

எந்தளவுக்குத் தமிழர்கள் தங்கள் சுய உரிமையைக் கோருவதற்கு நியாயம் உள்ளதோ அதேயளவு நியாயம் பெண்களுக்கும் உண்டு என்பதை ஆண்கள் ஏற்றுக்கொள்ளாத வரைக்கும் தமிழர்களுக்கு தங்களுக்கான உரிமை பற்றிப் பேசத் தகுதி கிடையாது. அதுமட்டுமல்லாது அவர்களது போராட்டமும் வெற்றி பெறமாட்டாது.

ஒரு சமூகத்தின் எத்தகைய மாற்றமும் அச் சமூகத்தில் வாழும் பெண்களின் சம பங்களிப்பு-ஈடுபாடு இல்லாமல் ஏற்படமுடியாது. இதனை ஆண்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ பெண்களாகிய நாம் உணர்ந்து கொண்டு செயற்படும் போதுதான் எமக்குச் சுதந்திரம் கிடைக்க வழியேற்படும். ஆனால் இலங்கையின் இன்றைய சூழலில் நாம் அதனை புரிந்து கொள்வதை தடுக்கும் வகையிலேயே அரசியல் நிகழ்ச்சிநிரல்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உலகளாவிய அளவில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் மக்கள் கூட்டத்தினுள் ஆண்களை விட பெண்கள் இருமடங்கு அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். அரசியல்ரீதியாக தமிழ் மக்கள் நசுக்கப்படும் போது அதனுடன் ஆண்களின் ஆதிக்கவாத அதிகார ஒடுக்குமுறை பெண்களை மேலும் ஒரு படி அதிகமாகவே நசுக்குகிறது.

ஆனால் இலங்கையில் தமிழர்கள் மத்தியில் வாழும் பெண்களுக்கு ஆணாதிக்கவாத அடக்குமுறை வகைக்கு வகை இடத்திற்கு இடத்தைப் பொறுத்து பல மடங்குகள் அதிகமாக பலவிதமான பரிமாணங்களுடன் செயற்படுகிறது.

இதற்கு பெண்களாகிய நாமும் நம்மை அறியாமலேயே துணை நிற்கிறோம் என்பதுதான் இன்றைய யதார்த்தம். தவறு எங்களுடையதல்ல. எம்மை கற்பித்து வளர்த்த சமூகமே அதற்குப் பொறுப்பு.

அடிமைச்சாசனங்களையும்-அடங்கிப்போவதையும்-ஆணாதிக்கத்தையும் வலியுறுத்தும் சமயங்களை வழிபட்டுக்கொண்டும் ஆணுக்குத் துணையாக படைக்கப்பட்டவள் பெண் என்பதை நம்பிக் கொண்டும் வாழும் பெண்களாகிய நாம் நமக்கு நம்மவர்களாலேயே மாட்டப்பட்ட விலங்குகளை உடைத்தெறியாதவரை தொடர்ந்தும் பெண்கள் அடக்கப்படுவதும்-மழுங்கடிக்கப்படுவதும்-ஏமாற்றப்படுவதும்-கொல்லப்படுவதுமான வரலாறு நீண்டு கொண்டே செல்லும்.

தங்கள் சுயவாழ்வைத் துறந்து வந்து தமது உயிரை விடத் துணிந்து நின்று எமக்காகப் போராடிய பெண்கள் இன்று வாழ்வதற்கான ஆதாரங்கள் எதுவும் இன்றி நடுத்தெருவில் நிற்கையில்-நாட்டுக்கான பொதுப்பணியில் வாழ்க்கைத்துணையைப் பறிகொடுத்த தாய்மார் தங்கள் பிள்ளைகளுடன் சீவனப்பாட்டுக்கு வழியின்றி அடுத்தவர் தயவை நாடி நிற்கையில்-பெற்றோரை இழந்த குழந்தைகள் அனாதை இல்லங்களில் பரிதாபத்துக்குரிய சந்ததிகளாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஆணாதிக்க அரசியல்வாதிகள் அவற்றை வைத்து வீர வசனங்கள் பேசி வெற்றுச் சவால்கள் விட்டு வழமையான வர்க்க வியாபாரம் நடாத்துகிறார்கள்.

**தங்கள் சுயவாழ்வைத் துறந்து வந்து தமது உயிரை விடத் துணிந்து நின்று எமக்காகப் போராடிய பெண்கள் இன்று வாழ்வதற்கான ஆதாரங்கள் எதுவும் இன்றி நடுத்தெருவில் நிற்கையில்-நாட்டுக்கான பொதுப்பணியில் வாழ்க்கைத்துணையைப் பறிகொடுத்த தாய்மார் தங்கள் பிள்ளைகளுடன் சீவனப்பாட்டுக்கு வழியின்றி அடுத்தவர் தயவை நாடி நிற்கையில்-பெற்றோரை இழந்த குழந்தைகள் அனாதை இல்லங்களில் பரிதாபத்துக்குரிய சந்ததிகளாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஆணாதிக்க அரசியல்வாதிகள் அவற்றை வைத்து வீர வசனங்கள் பேசி வெற்றுச் சவால்கள் விட்டு வழமையான வர்க்க வியாபாரம் நடாத்துகிறார்கள்.**



எங்களை-பெண்களை மனிதர்களாக மதிக்கும் சமூகம் உருவாக வேண்டுமானால் நாமே அதற்கான வழிகளைத் தேடவேண்டும். எமது பாதுகாப்புக்கு நாம் அடுத்தவரை நம்பும் எமது அடிமை மனப்பான்மையை மாற்றும் அரசியல் மார்க்கத்தை கண்டறியவேண்டும். எமக்கான பாதுகாப்பை நாம்தான் உருவாக்க வேண்டும். 68 ஆண்டு கால எமது ஆண் வர்க்கத்தின் அரசியல்தான் இன்று எமக்கு எதிரான வன்முறைகளுக்கு மூல காரணம்.

காலங்காலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தமிழர்கள் மத்தியில் இடம்பெற்ற வண்ணமே இருந்து வந்துள்ளது. அவற்றிற்கான நீதியும் தண்டனையும் பாதிக்கப்பட்ட பெண்ணுடைய சமூக மட்டத்தைப் பொறுத்தே அமைந்து வருகின்றன. இந்த சமூக மட்டம் என்பது இனம்-சாதி-சமயம்-வர்க்கம்-செல்வாக்கு-உறவு-நட்பு என்ற பல அளவுகோல்களுக்கு ஊடாகவே கணக்கிடப்பட்டு கையாளப்பட்டு வருகிறது. அதேவேளை எத்தனையோ பெண்களின் கொலைகள் விசாரணைக்கு உட்படாமலேயே தற்கொலைகளாக விபத்துக்களாக சட்டத்தினால் மூடிமறைக்கப்பட்டும் வந்துள்ளன. இதே போன்ற மூடிமறைப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறக்கூடிய விதமாகவே எமது இன்றைய அரசியல் போக்குகளும் காணப்படுகின்றன.

இலங்கையின் இன்றைய நீதிச் சட்டங்கள் ஆண் வர்க்கத்தினால் எழுதப்பட்டு ஆளும் வர்க்க ஆணாதிக்க அரசியல்வாதிகளினாலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது. நீதி கேட்டுச் செல்லும் பெண்கள் நீதிமன்றங்களில் கேவலப்படுத்தப்படும் நிர்வாகமே இன்று நடைமுறையில் உள்ளது. சட்டத்தின் காவலர்கள் பெண்களை மனிதர்களாக மதிக்கும் அறிவு அற்றவர்களாகவே பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். பெண்களைப் பற்றிய ஆண்களின் இந்தக் கண்ணோட்டத்திற்கு எந்தவிதமான எல்லைகளும் கிடையாது.

எம்மை அடக்கி ஆளும்-எம்மை ஆட்டுவிக்கும்-எம்மை ஆடவைக்கும் ஆண் மேலாதிக்க வாத அரசியலை ஆதரித்துக் கொண்டு நாம் எமக்கான பாதுகாப்பை உருவாக்க முடியாது. தங்க நகைகளுக்கும் தங்கச் சரிகைப் பட்டுக்களுக்கும் ஆசைப்பட்டுக் கொண்டு பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் இயலாது. அரசியல் தளத்தில் அதன் இயங்கு விசைகளாக பெண்கள் நாம் செயற்பட்டு மக்களுக்கான அரசியலை எமது கையில் எடுக்க வேண்டும்.

அவ்வப்போது இடம்பெறும் கொடிய சம்பவங்களின் போது மட்டும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி அறிக்கைகளையும் கண்டனங்களையும் வெளியிடுவதன் மூலம் பெண்களுக்கு சுதந்திரமான வாழ்வை உருவாக்கமுடியாது. எமது சமூகத்தில் எமக்கு எதிராக தற்போது நடைமுறையில் சகல மட்டங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மனித உரிமைகளுக்கு முரணான சிந்தனைகள்-செயற்பாடுகள் யாவும் தகர்த்தெறியப்படுவதற்கான வழிமுறைகளைத் தேடவேண்டும்.

அதற்கான முதல் முயற்சியாக இன்றைய தேர்தலை நாம் எமது விடுதலைக்கான போர்க்களமாக பயன்படுத்த வேண்டும். அதற்காக நாம் நமக்குள்ளே சில கேள்விகளை கேட்க வேண்டும். தமிழர் அரசியலில் இன்று பெண்களின் பிரதிநிதித்துவம் உண்டா? ஆம் என்றால் பெரும்பான்மையான பெண்களைக் கொண்ட சமூகத்தில் வேட்பாளர்களின் விகிதாசாரம் எத்தனை? பதில் இல்லையெனின் அதற்கான காரணம் யாது? எமது உரிமைக்கான போரில் பல்லாயிரக்கணக்கில் பெண்களைப் பறிகொடுத்த பின்னரும் இன்றைய ஜனநாயக அரசியலில் எங்களின் பிரதிநிதித்துவம் பூச்சியமாக இருப்பது ஏன்?

சுயாட்சி கிடைத்துவிட்டால் பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்போம் என்று கோஷமிடுபவர்கள் யார்? பெண்கள் பற்றி அவர்களின் மதிப்பீடு என்ன? தமிழர் ஆட்சியும் தமிழ் பொலிசாரும் பெண்களுக்கு சம உரிமையை வழங்குவார்களா? இவற்றிற்கான உண்மையான-யதார்த்தமான பதில்களை கண்டடைவதன் ஊடாகவே நாம் எமக்கான பாதுகாப்புக்கு வழி காணமுடியும்.

சீவி முடிச்சு சிங்காரிச்சு நின்று கொண்டு ஆண்களின் அதிகாரத்தை பண்பாடு-கலாச்சாரம் என்ற போர்வையின் கீழ் அங்கீகரித்து நிற்கும் வரை நாம் அடிமைகளாகவும்-தலையாட்டும் பொம்மைகளாவும்-பயந்தாங்கொள்ளிகளாகவும்-கசக்கி வீசப்படுகிறவர்களாகவும்-கடித்துக் குதறப்படுகிறவர்களாகவும்-பரிதாபத்திற்குரியவர்களாகவும்-பாவனைப் பொருட்களாகவும் விளங்குவது தவிர்க்கமுடியாது.

பெண்கள் உரிமைகளுக்காக என்ற கோதாவில் ‘நட்டநடு நிசியில் பெண்கள் பயமின்றி நடமாடினார்கள்» எனவும் «மரண தண்டனை பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கும்» என்றும் சிலர் கூறி வருகிறார்கள். இந்தக் கருத்துக்கள் நிச்சயம் சாதாரண பெண்களின் வாழ்வு பற்றிய கரிசனம் கொண்டவர்களாலோ அல்லது மனித உரிமைகள் பற்றி அக்கறை கொண்டவர்களாலோ முன் வைக்கப்படமுடியாது. அடக்குமுறை ஆட்சியை ஆதரிப்பவர்களும்-உரிமைகளுக்கு வெள்வேறு அளவுகோல்களை கொண்டிருப்பவர்களும் மட்டுமே இப்படியான கருத்துக்களை முன்வைக்கமுடியும்.

புங்குடுதீவுக் கொடுமைக்கு நீதி வேண்டும் என்ற பெயரில் அவரவர் தங்களுக்கு லாபம்தான் தேடுகிறார்கள்



படிப்பகம்



# கொலொம்பிய ஒப்பந்தம் குபார்க் பாப்பரசர்

உலக வரலாற்றில் நீண்டகாலமாக தொடர்ந்து இயங்கும் கெரில்லா இயக்கங்களில் மிகவும் பிரபலமானது, பார்க்(FARC) எனப்படும் கொலம்பிய புரட்சிகர ஆயுதப்படை - மக்கள் இராணுவம் ஆகும். 1964 இல் ஆரம்பிக்கப்பட்ட பார்க் (FARC) இடதுசாரிகளையும், சமூகப் போராளிகளையும் வேட்டையாடிய அமெரிக்க அடிவருடியான கொலம்பிய அரசுக்கெதிராக, கொலொம்பிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுதப் பிரிவாகும். ஆரம்பித்த சில வருடங்களிலேயே தனது தாய்க் கட்சியுடன் முரண்பட்டு, தன்னை சுதந்திரமான இயக்கமாக நிலைநிறுத்திக் கொண்டது பார்க்(FARC). ஆரம்பத்தில் மார்க்சிஸ லெனினிய போராட்ட இயக்கமாகத் தன்னை வெளிப்படுத்திய பார்க்(FARC) மிக விரைவாகவே கிட்டத்தட்ட கொலம்பியாவின் 40 வீதமான நிலப்பரப்பைத் தனது ஆளுமைக்குள் கொண்டு வந்தது. இவ் வெற்றிக்கு, சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி வரை உலகில் நிலவிய பனிப்போரும், அன்று அமெரிக்கா மற்றும் மேற்குநாடுகளுக்கு எதிராக இயங்கிய சர்வதேச இடதுசாரி முகாமும் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகும்.

90 களுக்குப் பிற்பாடு சிதைந்து சீரழிந்து, போதைவஸ்துக் கடத்தல், ஆள்கடத்தல், கொலை - கொள்ளையில் ஈடுபடுதல் போன்ற மனிதவிரோதச் செயல்களில் உலக அளவில் ஈடுபடும் மிக முக்கிய மாபியா கும்பல்களில் ஒன்றாக மாறியுள்ளது பார்க்(FARC). அரசியல்ரீதியாக பார்க் இயக்கம் சிதைவடைந்து போனாலும், அது தனது அமைப்பு ரீதியானதும், ஆயுத அடிப்படையிலானதுமான பலத்தை இன்றுவரை இழக்கவில்லை. இதனால் கொலொம்பிய அரசுக்கு இன்றும் சவாலான அமைப்பாகவே இருந்து வருகிறது.

இந்நிலையில் இலத்தீன் அமெரிக்காவின் "இடதுசாரிய" அணி நாடுகள் எனக் கணிக்கப்படும் கியூபா, ஈகுவட்டோர், ஆர்ஜெண்டீனா, வெனிசுவேலா, சிலி போன்ற நாடுகளின் ஆதரவுடன், கியூபாவின் தலைநகர் ஹவானாவில் 2012 ஆம் ஆண்டு, பார்க் இயக்கத்துக்கும் கொலம்பிய அரசுக்கும் இடையில் பேச்சவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. பின்கதவால் இப்பேச்சுவார்த்தையைக் குழப்ப அமெரிக்கா செய்த "சதிகளால்" ஒரு முடிவுக்கு வர முடியாமல் அலைக்கழிக்கப்பட்டது. இந்நிலையில் வத்திக்கானில் 2013 இல் பதவிக்கு வந்த பாப்பரசர் பிரன்ஸ்(Frans) இன் தலையீட்டால் வத்திக்கான் ஒபாமா நிர்வாகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், அமெரிக்க பின்கதவு அரசியல் முடிவுக்கு வர, பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன.

இதன் பயனாய் புரட்டாசி 23 ஆம் திகதி பார்க் -கொலம்பிய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இவ் ஒப்பந்தம், பாப்பரசர் பிரன்ஸ்(Frans) தனது கியூபாவிற்கான நான்குநாள் விஜயத்தை நிறைவுசெய்து கொண்டு அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்ற சில மணித்தியாலங்களிலே கைச்சாத்திடப்பட்டதென்பது கவனிக்கப்பட வேண்டிய விடையம். கியூபாவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றாலும், இவ் ஒப்பந்தத்தின் பின்னால் பாப்பரசரும், வத்திக்கானும் செயற்பட்டிருப்பதென்பது தெள்ளத்தெளிவான "இரகசியம்" என்பது அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பாகும். இதேபோன்றே கடந்த வருடம் அமெரிக்காவுக்கும் - கியூபாவுக்கும் இடையில் பாப்பரசரும் வத்திக்கான் நிர்வாகமும் தரகுவேலை பார்த்தது எல்லோருக்கும் நினைவிருக்கலாம். இங்கு எழும் கேள்வி என்னவென்றால், பாப்பரசர் பிரன்ஸ் இலத்தீன் அமெரிக்காவை சேர்ந்தவர் என்பதற்கப்பால், அவரும் கத்தோலிக்க திருச்சபையும் இந்த "சமாதான" முயற்சிகளில் ஈடுபடுவதன் பின்னால் உள்ள அரசியல் என்னவென்பதேயாகும்?



# ஐரோப்பா வரும் அகதிகளைத் தடுக்க முட்கம்பி வேலிகள்



இலட்சக்கணக்கான அகதிகளும் - ஆயிரக்கணக்கான பிணங்களும் குவிய, அகதிகள் வரும் பாதைகளை குறிவைத்து பல கிலோமீற்றருக்கு முட்கம்பி வேலிகளை மேற்குநாடுகள் அமைக்கின்றது. மத்திய கிழக்கில் மரணத்தில் இருந்து தப்பியவர்கள் - ஐரோப்பாவில் அகதிப் பிணமாகி மிதக்கின்றனர்.

2ம் உலக யுத்தத்தின் பின் கம்யூனிசம் - முதலாளித்துவம் என்ற இரு வேறு வர்க்க உலகை பிரிக்கவும் - தடுக்கவும் என்று கூறி, 1960 களில் மேற்கு - கிழக்கு ஜெர்மனியை பிரித்து மதில் கட்டப்பட்டது. அந்த மதிலை கோர்பச்சேவ் காலத்தில் இடித்தபோது, "ஜனநாயக" விரோத "கம்யூனிசம்" பற்றி முதலாளித்துவம் கதை கதையாகக் கூறியது. வேடிக்கை என்னவென்றால் குருசேவ் காலத்தில் மேற்கு ஜெர்மனி நிதி கொடுக்க - கிழக்கு ஜெர்மனி மதிலைக் கட்டியது என்பது வரலாற்றின் முரண் நகை. அன்று இந்த மதில் மூலம் கம்யூனிசம் மேற்கு நோக்கி நகர்வதை தடுக்கவும் - மறுபக்கத்தில் முதலாளித்துவம் கிழக்கு நோக்கி செல்வதை தடுக்கவும் - என்ற இரு முரண் அரசியல் கூறுகள் அரங்கேறின.

இந்த வரலாற்றுப் பின்னணியில் ஐரோப்பாவை நோக்கி மக்கள் வருவதைத் தடுக்க முட்கம்பி வேலிகளும் - போர்க்கால கண்காணிப்புகளும் முனனெடுக்கப்படும் சூழலில், ஐரோப்பாவை நோக்கி வரும் பாதையெங்கும் பிணக் குவியலாகி மாறியுள்ளது.

இன்றைய அகதிகளின் நிலைமைக்கான காரணம் மேற்குநாடுகளே. இந்த வகையில் இந்த அகதிகளை மேற்குநாடுகள் ஏற்றேயாக வேண்டும். ஈராக் - ஆப்கான் ஆட்சிகளை அமெரிக்க தலைமையிலான

**இந்த வரலாற்றுப் பின்னணியில் ஐரோப்பாவை நோக்கி மக்கள் வருவதைத் தடுக்க முட்கம்பி வேலிகளும் - போர்க்கால கண்காணிப்புகளும் முனனெடுக்கப்படும் சூழலில், ஐரோப்பாவை நோக்கி வரும் பாதையெங்கும் பிணக் குவியலாகி வருகின்றது.**

மேற்குநாடுகள் ஆக்கிரமித்தது முதல், லிபிய ஆட்சியை கவிழ்த்து சிரியா ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்ததன் மூலம், இந்த நாடுகள் எங்கும் இஸ்லாத்தின் பெயரில் அராஜகங்கள் அரங்கேறி வருகின்றது.

இஸ்லாத்தின் பெயரில் வெவ்வேறு சமூகப் பிரிவுகளையும் - பிற மதங்களையும் ஒடுக்குவதும், கொல்வதும் நடந்தேறுகின்றது. பொது மக்களின் செல்வத்தை கொள்ளை அடிப்பதும் - பெண்களை பாலியல் அடிமையாகக் கொள்வதையும், இஸ்லாமியமாக கூறிக் கொள்ளும் கும்பல்களின் அதிகாரம் தழைத்தோங்கி வருகின்றது. யுத்த அடிமைகளைக் கொண்டதும் - அவர்களை வாங்கி விற்பதும் வரை அங்கு அரங்கேறுகின்றது.

இந்தவகையில் அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகளின் பொருளாதார - இராணுவநலன் சார்ந்த தலையீடுகள், இன்று மத்தியகிழக்கின் ஒரு பகுதியை, மக்களை சூறையாடி அவர்களை அழித்து வருகின்றது.

மத்தியகிழக்கு எங்கும் மக்கள் வாழ்விழந்து அகதிகளாகி வருகின்றனர். மேற்கு நோக்கிய புலம்பெயர்வு என்பது, வரலாறு காணாத அளவுக்கு முடிவின்றித் தொடருகின்றது.

ஆளும் வர்க்கங்களாலும் - ஆட்சியாளர்களாலும் (கட்சிகளாலும்) இஸ்லாமிய வெறுப்பூட்டப்பட்ட ஐரோப்பிய (இன - மத - நிறவெறி) சமூகம் நோக்கி அகதிகளின் வருகையானது, ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலும் - மக்களுக்கு இடையிலும் பிளவுகளையும் மோதல்களையும் உருவாக்கி வருகின்றது.

மறுபக்கத்தில் அகதிகள் வருகின்ற பாதைகளுக்கு முட்கம்பி வேலிகள் போட்டு கட்டுப்படுத்துவதை காட்சிப்படுத்துவதும் - கண்காணிப்புகளை அதிகரித்து ஒடுக்குவதும், கடல் - தரை எங்கும் அகதிகளின் பிணங்களால் குவிவதைத் தடுக்க முடியவில்லை.

மனிதவிரோத முதலாளித்துவ - ஏகாதிபத்திய அரசுகளால் மக்கள் தவறாக வழிநடத்தப்படும் சூழலில், அகதிப் பிணங்கள் இதன் பின்னான உண்மைகளையும் - இதன் பின்னணியையும் ஆராயுமாறு மனிதகுலத்தைக் கோருகின்றது.





படிப்பகம்

# பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்க எதிர்க்கட்சித் தலைவர் பதவி

எதிர்க்கட்சி தலைவர் யார் என்பதோ - எந்த இனத்தவர் என்பதோ - எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதோ - எது பெரும்பான்மை சிறுபான்மை என்பதோ, ஜனநாயகத்தின் அடிப்படை பிரச்சனையல்ல. மாறாக பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைமை என்பது, பாராளுமன்ற ஜனநாயகம் குறித்து என்னவிதமான முடிவையும் - நடைமுறையையும் கொண்டிருக்கின்றது என்பதே, ஜனநாயகம் குறித்தான அடிப்படைக் கேள்வியாகும். எதிர்க்கட்சி தலைமை என்பது முழு இலங்கை மக்களின் குரலாக இருக்கவேண்டும் என்பது குறித்து, அக்கறைப்பட வேண்டும்.

இன்று அரசுக்கு எதிரான எதிர்க்கட்சியும் - தலைமையற்ற ஒரு புதிய நிலைமை தோன்றி இருக்கின்றது. இருக்கும் எதிர்க்கட்சித் தலைமை என்பது, குறுகிய இனவாதத்தைப் பேசுகின்றதும் - தன் இனத்தையே ஒடுக்குகின்ற இன மேலாதிக்க சக்திகளையே பிரதிநிதித்துவம் செய்கின்ற, படுபிற்போக்கான மக்கள்விரோத அரசியலையும் - நடைமுறையையும் கொண்டது.

நாட்டின் கல்வி - சுகாதாரம் - விவசாயம் சார்ந்த மக்களின் உடனடிப் பிரச்சனைகள் - அது சார்ந்த போராட்டங்கள் மீது எந்தச் சமூக அக்கறையுமற்றுக் கிடக்கின்றது. குறிப்பாக இனரீதியாக எடுத்தால், இந்திய ரோலர்கள் வடக்கு மீனவர்களின் மீன்பிடிவளத்தை அழிப்பதை எதிர்த்து வடக்கு மீனவர்களின் போராட்டம் குறித்தோ - வடக்கு வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் குறித்தோ அக்கறைகொள்ளாத கட்சி, முழு மக்களுக்காக கடுகளவு கூட குரல் கொடுக்கப் போவதில்லை.

சொந்த «இன» மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டாத - வாக்குப் போடும் மந்தைகளாக தமிழ் மக்களை இழிவாக கையாளுவதையே பாராளுமன்ற ஜனநாயகமாகக் கருதும் அதேநேரம், யாழ்மேலாதிக்க சமூக அமைப்புமுறையை தங்கள் நடைமுறையாகக் கொண்டவர்கள் இவர்கள். இந்த வகையில் போராடும் மக்களை ஒடுக்குவதையே - அரசுக்கு நிகரான வகையில் அரசியலாகக் கொண்டவர்கள்.



**நாட்டின் கல்வி - சுகாதாரம் - விவசாயம் சார்ந்த மக்களின் உடனடிப் பிரச்சனைகள் - அது சார்ந்த போராட்டங்கள் மீது எந்தச் சமூக அக்கறையுமற்றுக் கிடக்கின்றது. குறிப்பாக இனரீதியாக எடுத்தால், இந்திய ரோலர்கள் வடக்கு மீனவர்களின் மீன்பிடிவளத்தை அழிப்பதை எதிர்த்து வடக்கு மீனவர்களின் போராட்டம் குறித்தோ - வடக்கு வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் குறித்தோ அக்கறைகொள்ளாத கட்சி, முழு மக்களுக்காக கடுகளவு கூட குரல் கொடுக்கப் போவதில்லை.**

இன்றைய இவர்களின் எதிர்க்கட்சித் தலைமையிலான செயற்பாடானது, இலங்கை மக்களின் ஜனநாயகத்தை குழிபறிக்கின்றதும் - நவதாராளமயத்தை முன்னெடுக்கும் சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு துணை நிற்கின்றது என்றால் மிகையாகாது. எதிர்க்கட்சி என்பதும் - பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைமை என்பதும், அரசுக்கு எதிராக போராடும் மக்களின் பிரச்சனைகளை முன்வைத்து - அரசுக்கு எதிராக செயற்படுவதும் அதே வேலை சரியான தீர்மானத்திற்கு ஆதரவு வழங்குவதுமாகும்.

பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைமையைப் பெற்றுள்ள கூட்டமைப்பு அப்படிப்பட்ட கட்சியல்ல. தமிழ் இனவாதக் கட்சியான கூட்டமைப்பு, சொந்த இன மக்களின் எதிர்க்குரல்களை ஒடுக்குகின்ற - அதற்காக குரல் கொடுக்க மறுக்கின்ற - தன் கட்சிக்குள் ஜனநாயகத்தை மறுக்கின்ற - தனது கட்சிக் கூட்டணிக்குள் ஜனநாயகவிரோத முடிவுகளைத் திணிக்கின்ற, ஒரு ஜனநாயகவிரோத கட்சியாகும். அது இன்று பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைமையை, அரசுடன் கூடிய ஒரு கூட்டுச்சதி மூலம் பெற்று அதற்கு சேவை செய்கின்றது.

பாராளுமன்றத்தில் உண்மையான ஜனநாயகத்தை முன்தள்ளும் எதிர்க்கட்சியாக, சிங்கள - முஸ்லிம் - மலையக - தமிழ் மக்களின் ஜனநாயக குரல்களையும் - போராட்டங்களையும் ஆதரித்து பாராளுமன்றத்தில் குரல்கொடுக்கும் கட்சிக்குரிய குறைந்தபட்ச அருகதை கூட இக்கட்சிக்கு கிடையாது. பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கும் எதிர்க்கட்சி பாத்திரத்தையே, கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் தொடங்கி இருக்கின்றது.

மக்களின் போராட்டம் பற்றிய குரல்கள் இனி பாராளுமன்றத்தில் இடம்பெறப் போவதில்லை என்பதையே பாராளுமன்றத்தில் கூட்டமைப்பு ஜனநாயகமாக்கி இருக்கின்றது.





## லலித் குகன் எங்கே?

கடத்திச் செல்லப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் செயற்பாட்டாளர்களான லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பில், நியாயமான விசாரணைகளை நடத்துமாறு கோரி, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் கடந்த 10 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. லலித்குமாரின் தந்தையான ஆறுமுகம் வீரராஜ் இந்த முறைப்பாட்டை செய்தார். அவருடன் முன்னிலை சோசலிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ மற்றும் சட்டத்தரணி நுவான் போபகேயும் உடன் சென்றிருந்தனர்.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த துமிந்த நாகமுவ, கடந்த காலங்களில் பெருமளவிலானோர் கடத்தப்பட்டதுடன் காணாமல் போக செய்யப்பட்டனர் என்பதால், லலித் மற்றும் குகன் ஆகியோரை போல் அனைத்து நபர்கள் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக கூறியுள்ளார். 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதேசத்தில் வைத்து லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் கடத்திச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# வடக்கில் இடதுசாரிய செயற்பாடுகள்! முன்னைய தொடர்ச்சி



முன்னெப்போதும் நாடு கண்டிராத மாபெரும் ஆயுதக்கிளர்ச்சி ஒன்றை 1971இல் ஜே.வி.பி முன்னெடுத்தது. பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி கிட்டத்தட்ட 41 பொலிஸ் நிலையங்களை தாக்கி கைப்பற்றினார்கள். இத்தாக்குதல்களில் கணிசமான அளவு பொலிசார் கொல்லப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் நிலையங்களில் இருந்த பெருமளவான பொலிஸார் உயிர்தப்பி தமது தலைமைக் காரியாலயத்தில் தஞ்சமடைந்தனர். அரசாங்கம் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது. யாழ்ப்பாணத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜயவீராவை விடுதலை செய்வதற்காக தென்னிலங்கையில் இருந்து இரண்டு தனியார் பேருந்துகளில் வந்த சிங்கள வாலிபர்கள் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையை தாக்கினார்கள். யாழ் பொலிசார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால் ஜே.வி.பியினரது தாக்குதல் முறியடிக்கப்பட்டது. சிலர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்கள். பெருமளவிலானோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இக்கால கட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினர் மாவோயிஸ்ட் பிரிவு வடபகுதியில் ஒரு பலமான சக்தியாக இருந்தார்கள். அவர்களின் உதவியை நாடியிருந்தால் சுலபமாக றோகண விஜயவீராவை விடுதலை செய்திருக்க முடியும். தமிழர்களுக்கு எதிரானது என்பதினாலும் 1966இல் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி விசேட மசோதாவை எதிர்த்து நடாத்திய இனவாத ஊர்வலத்தில் கலந்து கொண்டதன் மூலமும் தமிழ் மக்களுக்கு எதிரான தனது இனவாத போக்கை வெளிக்காட்டியதனாலும், றோகண விஜயவீர கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிச் சென்றதினாலும் ஜே.வி.பி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உதவியை நாடவில்லை. 15 நாட்களுக்கும் அதிகமாக தாம் கைப்பற்றிய பொலிஸ் நிலையங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஜே.வி.பியினர் அரசினால் ஏவப்பட்ட முப்படைகளினதும் கூட்டுத்தாக்குதல் காரணமாக தாம் கைப்பற்றி வைத்திருந்த அனைத்து பொலிஸ் நிலையங்களையும் இழந்தனர். நாட்டில் பெரும் பயங்கர அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜே.வி. பியினர் கொல்லப்பட்டனர், பத்தாயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஜே.வி. பியினருக்கு உதவிய பல பெண்கள் கைதுசெய்யப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இவ்வாறாக கொல்லப்பட்டவர்களில் கதிர்காம அழகுராணி மனம்பெரியும் ஒருவராவர். இவ்வாறான அடக்குமுறைக்கு உள்ளான பொதுமக்கள் ஏராளம். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் முப்படைகளுடன் பொலிசாரையும் பயன்படுத்தி நாட்டிலிருக்கும் புரட்சிகரசக்திகளை அடக்கி ஒடுக்க முடிவெடுத்தனர். இதனடிப்படையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாவோயிஸ்ட் பிரிவின் தலைவர் தோழர் நா.சண்முகதாஸன் அடங்கலாக தோழர்கள் காந்தி போன்றோரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். நாடுதழுவியரீதியில் முக்கிய தோழர்கள் தேடப்பட்டனர். பல தோழர்கள் கைதுசெய்யப்பட்டு பொலிஸ்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சிறிதுநாட்களில் விடுதலை செய்யப்பட்டனர். இக்காலத்தில் வடபகுதியில் ரஷ்யசார்பு கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக் கட்சி ஆகிய கட்சிகளுக்கு எவ்வித இடையூறுகளுமின்றி தமது அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுத்து செல்லக்கூடியதாக இருந்தது. இது அவர்கள் மத்தியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கத்தின் பங்குதாரர்கள் இருந்தார்கள் என்பதினாலாகும்.

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாவோயிஸ்ட் பிரிவின் ஒரு பகுதியினர் அரச ஆதரவாளர்களாக மாறினார்கள். அதற்காக பிழையான காரணங்களை முன்வைத்தார்கள். ஜே.வி. பி ஒரு அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவுக்கட்சி, அதனால்தான் தேசிய முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக புரட்சி செய்தார்கள். எனவே நாம் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். அதற்காக நாம் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் என தமது செயலை நியாயப்படுத்தினர். அத்துடன் சீன அரசாங்கதுடன் இந்த அரசாங்கம் நட்பாக இருப்பதினாலும் நாம் இந்த அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் என தமது முடிவை பல பக்கத்தாலும் நியாயப்படுத்தினர்.

ஜே.வி.பி கிளர்ச்சி முடிவடைந்து பத்து மாதங்களின் பின் சிறையில் பல துன்பங்களை அனுபவித்த கட்சியின் தலைவர் தோழர் நா.சண்முகதாஸன் சிறையில் இருந்து விடுதலையாகி வந்தார். வந்ததும் கட்சியின் மத்திய கமிட்டியை கூட்டி உடனடியாக பொதுக்கூட்டம் ஒன்று நடத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றினார். அந்தக் கூட்டத்தில் கைதுசெய்து விசாரணை எதுவுமின்றி சிறைவைக்கப்பட்டிருக்கும் ஜே.வி.பி உறுப்பினர்களை உடன் விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற கோரிக்கையை அரசாங்கத்துக்கு பகிரங்கமாக முன்வைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றினார் ஆனால் கட்சிக்குள் இருந்த அரசசார்பு குழுவினர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 60 விகிதமானவர்கள் தோழர் நா.சண்முகதாசனின் கருத்தை ஆதரித்தனர். கொழும்பு கலாசார மண்டபத்தில் அரசியல் கைதிகளை விடுதலை செய் அல்லது விசாரணை செய் என்ற தலைப்பில் கூட்டம் நடந்தது. பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். தோழர் சண் அரசாங்கத்தை விமர்சித்ததுடன் அரசியல்கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தி தனது உரையை நிகழ்த்தினார். மக்கள் கரகோஷம் செய்து தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

1972 மே மாதம் அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பிற்கிணங்க அந்நாட்டுக்கு சென்றிருந்தவேளை, கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் ஒன்றுகூடி தோழர் சண்முகதாசனை கட்சியின் செயலாளர் பதவியில் இருந்தும் கட்சியிலிருந்தும் வெளியேற்றி விட்டதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு கட்சியை பிளவுபடுத்தினார்கள். இக்காரியத்தை மத்தியகுழு உறுப்பினர்களான ஹிக்கொட தர்மசேன, வாட்சன் பெனார்ந்து, மூர்த்தி, வி.ஏ.கந்தசாமி, கார்த்திகேசன், சூரியவன்ச குணசேகரா ஆகியோர் முன்நின்று செய்தனர். இச்சந்தர்ப்பத்தில் தோழர் சண்முகதாசன் அல்பேனியாவிலிருந்து சீனா சென்றிருந்தார். அவரை கட்சியிலிருந்து விலக்கியது பற்றி சீனர்கள் அறிவித்தார்கள். தோழர் சண்ணை கட்சியிலிருந்து விலக்கியது பற்றி அவர்கள் கவலைப்படவுமில்லை. ஏனெனில் இந்தச் சதியில் அவர்களுக்கும் தொடர்புண்டு. அதேவேளை கட்சியின் துணைச்செயலரான எம். சி.எம்.சாலி கட்சியின் மத்தியகமிட்டி, தோழர் நா.சண்முகதாசனை விலக்குவதாக எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை தோழர் நா.சண்முகதாசன் தற்போதும் கட்சியின் பொதுசெயலாளர்தான் என அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இவை நடந்துகொண்டிருக்க தோழர். நா.சண்முகதாசன் நாடுதிரும்பினார்.

நாடு திரும்பிய தோழர்.சண் கட்சியின் மத்தியகுழுவை கூட்டினார். அக்கூட்டத்தில் அறுபது வீதமானவர்கள் ஒன்றிணைந்து கட்சியை மீண்டும் அனைத்து பிரதேசங்களிலும் மீளக்கட்டி எழுப்புவது பற்றி ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டது. இந்த முடிவுக்கிணங்க வடக்கு பிரதேசத்தில் கட்சிக்கிளைகள், வாலிப சங்கக் கிளைகள், தொழிற்சங்கக் கிளைகள், கலை இலக்கிய சங்கங்கள், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க கிளைகள் என அனைவரையும் தொடர்ச்சியாகக் கூட்டி, பாட்டாளி வர்க்க அரசியல் வகுப்புகளை நடாத்தி மீண்டும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி கட்டியெழுப்பப்பட்டது. முதலாளித்துவ அரசாங்கத்தை ஆதரித்து சென்றவர்களின் செல்வாக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை மிகவும் பாதித்தது. இராணுவம், பொலிஸ் கெடுபிடிகளுக்கு பயந்தவர்கள், தியாகங்களை செய்ய தயாரில்லாதவர்கள், உத்தியோகங்களை வேண்டி நிற்பவர்கள், உத்தியோகங்களை பாதுகாக்க வேண்டியவர்கள், சீன புஸ்தகங்களின் விற்பனைப் பணத்தை அனுபவிக்க விரும்பியவர்கள், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க போராட்டங்களினால் கிடைத்த வெற்றிகளை தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்த விரும்பியவர்கள் போன்றோர் பூர்சுவா அரசாங்கத்தை ஆதரிக்க விரும்பினார்கள். மற்றும் ஒரு பகுதியினர் இவ்வாறான பிளவுகளால் மனவேதனை அடைந்து ஒதுங்கிக் கொண்டார்கள். இந்தப்பிளவால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாகும்.

இந்தப் பாதிப்புகளுக்கு மத்தியிலும் கட்சி அவர்கள் மத்தியில் தொடர்ச்சியாக வேலை செய்து பெரும்பான்மையானோரை வென்றெடுத்தது. மேலும் புதியவர்களை இணைத்துக் கொண்டு கட்சி புதிய உத்வேகத்துடன் இயங்கத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் தோழர் நா.சண்முகதாஸன், காந்தி அபயசேகரா, சமல்டி சில்வா வடபகுதியில் கட்சிப் பிரச்சாரக் கூட்டங்களை நடாத்தி கட்சியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியதுடன், யாழ் மாநகரசபை தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்த தோழர் சண் அவர்களை கட்சியின் தொழிற்சங்கமான இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் கீழ் அணிதிரளும்படி ஆலோசனை கூறினார். இதேபோல் யாழ்ப்பாணத்தில் உள்ள சினிமா தொழிலாளர்களையும் கட்சி தொழிற்சங்கத்தின் கீழ் அணிதிரட்டினோம். அவர்களின் தொழில் பிரச்சினைகள் சம்மந்தமான பல தொழில் நீதிமன்ற வழக்குகளில் தோழர் சண் ஆஜராகி வெற்றிபெற்றுக் கொடுத்தார். யாழ் மாநகர சபையில் பிரதானமாக 5 பிரிவுகளில் தொழிலாளர்கள் பணியாற்றினர். மராமத்துப் பகுதி, சுகாதாரப்பகுதி, மின்சாரப்பகுதி, நீர் விநியோகப் பகுதி, மெக்கானிக்கல் பகுதி என மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து பகுதிகளிலும் பணியாற்றிய தொழிலாளர்களில் நிரந்தர மாதச்சம்பளம் பெறும் தொழிலாளர்கள் மிகச் சொற்பமானவர்களாகவே காணப்பட்டனர். நிரந்தர நாட்சம்பளம் பெறும் தொழிலாளர், நிரந்தரமற்ற நாட்சம்பளம் பெறும் தொழிலாளர், சமயாசமய தொழிலாளர்கள் என 500க்கும் மேற்பட்டவர்கள் 20 வருடங்களாக பணியாற்றி வந்தனர்.

இவர்கள் தங்களை நிரந்தரமாக்கும்படியும், தாம் தினமும் தமது மேலதிகாரிகளால் இம்சைக்குள்ளாவதாகவும், தமக்கு நியாயம் வழங்கும் மாநகரசபை ஆட்சியாளர்களிடம் பலதடவைகள் முறையிட்டுள்ளனர். தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி மற்றும் அல்பிரட் துரையப்பா தலைமையிலான சுயேட்சை குழுவினரும் மாறி மாறி 20 வருடகாலமாக அதிகாரத்தில் இருந்த போதும் பல சாக்குப்போக்கு சொல்லி தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிராகரித்து வந்தனர், இதனால் விரக்தியுற்றிருந்த



படிப்பகம்

## அப்படி சொல்வார்களாம்

08 ம் பக்க தொடர்ச்சி

தெரிவுசெய்யப்பட்ட சம்பந்தன் மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் கொள்கைரீதியில் அரசாங்கத்திற்கு சார்பானவர்கள். இந்த எழுவரும் ஒரே கருத்தையும், ஒரே கொள்கையையும் உடையவர்கள். மாற்றுக் கருத்துக்கள் இருப்பினும், இலங்கையில் தற்போது உருவாகியுள்ள சம்பிரதாயத்தின்படி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளை கவனியாது ஒரே மேட்டுக்குடி இயந்திரமாக வேலை செய்கிறார்கள். அது குறித்து பல உதாரணங்கள் இருப்பதுடன், ஒன்றிரண்டை ஞாபகப்படுத்த முடியும். இரு கட்சிகளினதும் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கு எதிராக தாங்கள் தொடுத்த வழக்குகளை விலக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஒற்றுமை நன்றாக வெளிச்சத்திற்கு வந்த ஒரு சந்தர்ப்பம்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு போதுமான காலத்தை நீடித்துக் கொள்ளும்வரை நாடாளுமன்றம் கலைக்கப்படாதிருப்பதில் இவர்கள் உறுதியாக நின்றமை. இப்படியான நிலைமைகளை வைத்துப் பார்க்கும்போது, அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட அரசியலமைப்புச் சபை அர்த்தமற்றதாகக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம்

அடுத்த கேலிக்கூத்து என்னவென்றால், ஜனாதிபதியும் பிரதமரும் தத்தமது பிரதிநிதிகளை நியமித்த முறை. ஜனாதிபதியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட சம்பிக ரணவக ஓர் அமைச்சர். பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட விஜேதாச ராஜபக்ஷவும் ஓர் அமைச்சர். எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதியான ஜோன் செனவிரத்னவும் ஓர் அமைச்சர். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் ஓர் அமைச்சர். இதன்படி, அரசியலமைப்புச் சபையில் அங்கம் வகிக்கும் பத்துப் பேரில் நான்கு பேர் நிறைவேற்று அதிகாரத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்களாகும். அரசியலமைப்பு சபைக்கு நிறைவேற்று அதிகாரத்தின் இரு அமைச்சர்களை நியமித்ததன் மூலம் மைத்திரி மற்றும் ரணிலின் ஜனநாயகத்தின் தரம் தெரிகிறது. நிறைவேற்று அதிகாரத்தையும் சட்டவாக்கச் சபையையும் ஒருபோதும் ஒன்றோடொன்று கலக்கப்போவதில்லையென இவர்கள் ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் உறுதியளித்திருந்தனர். ஆனால், இறுதியில் அதைத்தான் செய்திருக்கிறார்கள். இதனால், அரச இயந்திரத்தின் அதிகாரம் வெட்டப்படுவதற்குப் பதிலாக அது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த போலி நல்லாட்சியாளர்கள் தமது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தி மக்களை மீண்டு ஒடுக்குவதற்கு தயாராகின்றனர் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டுதான் அரசியலமைப்புச் சபை. பொலிஸார் கைது செய்யும் ஒரு நபரை 24 மணித்தியாலங்களுக்குப் பதிலாக 48 மணி நேரம் தடுத்து வைக்கக் கூடிய ஜனநாயகத்திற்கு முரணான சட்டத்திலிருந்து, நாடாளுமன்றத்தில் தனியொரு கட்சிக்கு பெரும்பான்மை பலத்தை உறுதி செய்யும் 20வது அரசியலமைப்புத் திருத்தம் வரை இந்த பிற்போக்குத்தனத்திற்கு பல உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும். அரசியலமைப்பு சபையை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் கூட, ஜனநாயகத்தை வெள்ளித்தட்டில் வைத்து எமக்கு தரமாட்டார்கள். போராடித்தான் அதனைப் பெறவேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

சிறைகளில் எந்த வித விசாரணையும் இன்றி வாடும் அரசியல் சிறைக்கைதிகளை விடுதலை செய்யக்கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நட-த்தியுள்ளனர்.

26ம் திகதி நண்பகல் 12 மணியளவில் குறித்த கவ-னயீர்ப்பு போராட்டம் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.மாணவர்கள் மற்றும் விரிவுரையளர்கள் கலந்து கொண்டனர். சுமார் 20 நிமிடங்கள் இந்த போராட்டம் நடைபெற்றது.

மாணவர்கள், விரிவுரையா-ளர்கள் வளாகத்திலிருந்து வாயில் வரை நடந்து வந்து வாயிலில் நின்று போராட்ட-த்தை நடத்தினர். இதன்போது சிறைகளில் உள்ள உறவு-களை நல்லாட்சி குறித்து பேசிக்கொள்ளும் அரசாங்கம் விடுதலை செய்யவேண்டும் என மாணவர்கள் கேட்டுக் கொண்டனர்.

## உரிமைக் கோரிக்கைக்குள்

11ம் பக்க தொடர்ச்சி

என்பது எமக்கெல்லாம் நன்கு தெரிந்த உண்மை. இன்றைய இலங்கை அரசியல் யாப்பு-அரச கட்டமைப்பு-அவற்றின் அடித்தளத்தில் அமைக்கப்படும் அரசாங்கம் யாவுமே பெண்களை ஆண்களுடைய சொத்தாகவே கருதி அவர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்துகின்றன. ஆனால் வேடிக்கை யாதெனில் இதற்கும் தமிழ் ஆணாதிக்கவாதிகள் இனவாத முலாம் பூசி தங்களுடைய பெண் ஒடுக்குக்குமுறைப் பாரம்பரியத்தை மறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

மனிதர்களின் வளர்ச்சி வரலாற்றில், பெண்கள்தான் மனிதக் குழுக்களின் இயங்கு புள்ளியாகவும், அவற்றைக் கட்டமைக்கும் சக்தியாகவும் விளங்கி வந்துள்ளனர். இதுவே இயற்கை நியதியுமாகும். தனிச் சொத்துடைமை முறைமை தோன்றிய முதல் நாள் தொடக்கமே பெண்கள் ஆண்களுக்கு உரித்தான ஒரு பொருளாக-சொத்தாக ஆக்கப்பட்டு இந்நாள் வரை ஆண்களால் ஆளப்பட்டு வருகின்றனர்.

மனிதர்களை மனிதர்கள் ஆண்டு அடிமைப்படுத்தி சுரண்டி வாழ்ந்து கொண்டிருந்த காலங்களில் எழுதிவைக்கப்பட்ட சமய நூல்களை-இதிகாசங்களை-புராணக் கதைகளை பகுத்தறிவுடன் பரிசீலித்துப் பார்க்காமல் நாம் அந்நியரின் சினிமாப் படங்களையும்-நாடகங்களையும் பார்த்து பரவசப்பட்டுக் கொண்டிருந்தால் பிறந்த வீட்டுக் கூரையின் கீழும் எங்கள் மீது அடியும் - உதையும் - சித்திரவதைகளும் - மன அழுத்தங்களும் - அவமானப்படுத்தல்களும் -இன்னும் பல தரப்பட்ட வன்முறைகளும் தொடரவே செய்யும். இந்த அநியாயங்களுக்கு இன்றைய ஆணாதிக்க அரசியல் கட்டமைப்பின் கீழ் நாம் நீதி கோருவதால் எமக்கு நியாயம் கிடைக்காது.

பெண்களை தங்கள் விருப்பு வெறுப்புக்குரிய உடைமைச் சொத்தாக கருதுபவர்களே மாறி மாறி மக்களை ஆளும் அதிகாரம் படைத்தவர்களாக எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்றம் சென்றுகொண்டிருக்கிறார்கள். பெண்ணை ஆண் தனக்குச் சமமான மனிதனாகப் மதிக்கக்கூடிய ஒரு புதிய தலைமுறையை உருவாக்கும் வகையிலான கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே எமது வருங்கால சந்ததிகளுக்கு கண்ணீரும் கம்பலையும் அற்ற ஒரு வாழ்க்கைக்கு இன்றே அடித்தளம் அமைக்க முடியும்.

எனவே இதனை வாசிக்கும் பாட்டிமாரே தாய்மாரே அக்காமாரே தங்கைமாரே மகளிர்மாரே பெண்பிள்ளைகளே எமக்குச் சுதந்திரம்-பாதுகாப்பு-அச்சமற்ற வாழ்வு கிடைப்பதற்கு நாம்தான் வழிதேடவேண்டும் - உழைக்கவேண்டும் போராடவேண்டும். அதற்காக இலங்கையின் அரசியல் யாப்பை மாற்றுவோம்.

அந்த இலக்கை அடைவதற்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்து உண்மையுடன் உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளை நாட்டின் அரசியலில் நாமே தெரிவு செய்து முன்னிறுத்துவோம். இது இன்றோ நாளையோ உடனடியாகவோ நடக்கும் காரியம் அல்ல. மிக நீண்டகால நடைமுறை. ஆனால் அதனை இன்றே ஆரம்பிப்போம். நம்பிக்கையுடன் உழைப்போம். இறுதி வெற்றி எமக்கே.

«நாட்டின் பொது வாழ்க்கையில் பெண்கள் முன்னின்று பங்குபற்றாதவரை எந்தவொரு நாடும் முழுமையான முன்னேற்றத்தை எட்டமுடியாது என இக்காங்கிரஸ் கருதுகின்றது. எனவே நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்புக்களை ஆண்களோடு சேர்ந்து எமது நாட்டுப் பெண்களும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென வேண்டி நிற்கிறது»

(1930 ஏப்ரல் 23ல் யாழ்ப்பாணம் மாணவர் காங்கிரஸின் 6வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று)

## வடக்கில் இடதுசாரிய

14ம் பக்க தொடர்ச்சி...

தொழிலாளர் மத்தியில் கட்சி தொழிற்சங்கம் அமைத்து தொழிலாளர்கள் மத்தியில் செயற்பட்டது. தொழிற்சங்க பணிகளை முன்னெடுப்பதற்காக கட்சியின் முன்னிலை உறுப்பினர்களான ஏ.எம்.சி.இக்பால், எஸ். தியாகராசா(சட்டத்தரணி) ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக தொழிற்சங்கம் ஆரம்பித்து அவரவரது பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை கோரிக்கைகளாக யாழ் மாநகர சபைக்கு அனுப்பிவைத்ததுடன் இதுபற்றி பேசுவதற்கு தொழிற்சங்கத்துக்கு அனுமதி தருமாறு கோரப்பட்டது. இச்சந்தா்ப்பத்தில் யாழ் மாநகர சபை கலைக்கப்பட்டு நிர்வாகம் ஆணையாளர் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. விசேட ஆணையாளராக சி.வி.கே.சிவஞானம். நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு உதவியாக சட்டத்தரணி பூபாலன் செயல்பட்டு வந்தார். தொழிற்சங்கத்தின் கோரிக்கையை ஏற்க மறுத்த போதிலும் அடுத்தடுத்து தொழிலாளர்களின் கோரிக்கைகளை மாநகரசபைக்கு பலதடவைகள் அனுப்பிவைக்கப்பட்டது. மாநகரசபை நிர்வாகம், தொழிற்சங்கத்தை தாம் அங்கீகரிக்கவில்லை எனவும் அதனால் தாம் தொழிற்சங்கத்துடன் பேச தயாரில்லை எனவும் யாழ் மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் உறுதிபடத் தெரிவித்தார். இறுதியாக ஒருமாதம் கழித்து விசேட ஆணையாளரால் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஏ.சி. எம்.இக்பால், சட்டத்தரணி எஸ்.தியாகராசா ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. அன்றைய யாழ் மாநகர சபையின் விசேட ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தற்போதைய வடமாகாணசபையின் அவைத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதையடுத்து தொழிலாளர்களுடனான பல கலந்துரையடல்களின் பின் தொழிற்சங்க நடவடிக்கையில்(வேலைநிறுத்தம்) ஈடுபடுவதென தொழிலாளர்கள் முடிவெடுத்தனர். 15 நாட்களுக்குள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும், தவறினால் வேலைநிறுத்தத்தில் இறங்குவோம் என விசேட ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. ஆணையாளர் இதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. கோரிக்கைகளுக்கு தீர்வுகாண்பது தொடர்பாக தொழிற்சங்கத்துக்கு எதுவித பதிலும் அளிக்கப்படவில்லை. 15 நாட்கள் முடிவடைந்து சில தினங்களின் பின்னர் யாழ் மாநகரசபை வரலாற்றில் முன்னொருபோதும் கண்டிராத மாபெரும் வேலைநிறுத்தத்தில் மாநகரசபை தொழிலாளர்கள் குதித்தனர். வேலைநிறுத்தம் ஆரம்பித்து மூன்றாம்நாள் மாநகரசபை நிர்வாகம் ஆட்டம் கண்டது. மாநகர மக்களும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வழங்கி வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து தாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு முடிவுகட்டும்படி பலபக்கங்களில் இருந்தும் மாநகரசபை நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர். இதையடுத்து ஆணையாளர் தனது சட்டத்தரணி பூபாலன் மூலமாக தொழிற்சங்க சட்டத்தரணி எஸ்.தியாகராசாவுடன் தொடர்புகொண்டு நாளைய தினம் மாநகரசபை ஆணையாளர் சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவிருக்கிறார், சத்திரசிகிச்சை முடிந்து கடமைக்கு திரும்பியதும், தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக பேசுவோம், தற்போது வேலைநிறுத்தத்தை கைவிட்டு வேலைக்கு திரும்பும்படி கேட்கப்பட்டது. தொழிலாளர் கமிட்டி இது தொடர்பாக ஆராய்ந்தபின் வேலைநிறுத்தத்தை தொடர்வதென தீர்மானித்தனர்.

அதேவேளை தமது கோரிக்கைகள் தொடர்பில் எந்த இடத்திலும் பேச்சுவார்த்தைக்கு தயார் என்பதையும் தெரிவித்தனர். வேலைநிறுத்தம் தொடரும் என்பதை அறிந்துகொண்ட சி.வி.கே.சிவஞானம் வைத்தியசாலைக்கு வந்து தன்னை சந்திக்கும்படி தொழிலாளர் கமிட்டிக்கு அறிவித்தார். அவரது அழைப்பை ஏற்று தொழிற்சங்க பிரதிநிதி ஏ.எம்.சி.இக்பால், சட்டத்தரணி எஸ்.தியாகராசா தொழிலாளர் கமிட்டி பிரதிநிதிகள் ஆகியோர் படுக்கையில் இருந்த ஆணையாளரை சந்தித்தனர். அவர் சத்திரசிகிச்சை முடிந்து கடமைக்கு திரும்பியபின் தொழிலாளர்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைப்பதாக உறுதி கூறினார். தொழிலாளர் பிரதிநிதிகள் உறுதிமொழியை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர மாற்றுவழி இல்லாத நிலையில் கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஆணையாளர் முன்பாக வாசிக்கப்பட, படுக்கையில் .இருந்தபடியே ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதாக கையொப்பமிட்டார். சாட்சிகளாக அவரது சட்டத்தரணி பூபாலனும் தொழிலாளர் சார்பில் சட்டத்தரணி எஸ்.தியாகராசாவும் ஒபபமிட்டனர். இதைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது.

தொடரும்



படிப்பகம்

# போராட்டம்

41-32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய
தொலைபேசி / தொலைநகல் : 094 113185692
mpssrilanka@gmail.com, http// www.peoplesstruggle.com




## ஐ.நா அறிக்கையல்ல - மக்கள் தீர்ப்பாயமே இன்றைய தேவை!

2009 இல் முடிவுக்கு வந்த போரில் நடைபெற்ற போரக்குற்றங்கள், மனிதவுரிமை மீறல்கள் சம்பந்தமான ஐக்கியநாடுகள் சபையின் மனிதவுரிமைச் சபையின், அறிக்கை ஜெனீவாவில் 16 செப்டெம்பர் 2015 அன்று வெளியிடப்பட்டது. இவ் அறிக்கை பற்றி ஐ.நா மனிதவுரிமைச் சபையின் கமிசனர் சைட் ரா அட் அல் குசேயின் «இலங்கையில் 2002 இல் இருந்து 2011 ம் ஆண்டு வரை பாரதூரமான உரிமை மீறல்களின் வடிவங்களை அடையாளம் கண்டுள்ளது. இவை இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள், இலங்கை அரசாலும் அதன் நிழலுலக பயங்கரவாதக் குழுக்களாலும், புலிகளினாலும் இழைக்கப்பட்டிருக்கலாம்” எனக் கூறினார். மேலும் அவர் கூறுகையில் «இவ்வறிக்கை, போரால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியான தீர்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச நீதிபதிகள், வழக்குத்தொடுப்பவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிப்பது முக்கியமென்று பரிந்துரை செய்துள்ளது” என்றார்.

சர்வதேச நீதிமன்றத்தில் ஏற்றி «சிங்கள அரசைத் தூ க்கிற் போடுவோம்» ... «மஹிந்தவையும் சிங்களப் படைகளையும் சர்வதேசத்தின் துணையுடன் பழிக்குப் பழிவாங்கியே தீருவோம்».... «சர்வதேச விசாரணை மூலம் இலங்கையில் 1948 தொடக்கம் இன அழிப்பு நடந்ததென நிறுவுவோம்» ... என வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் மத்தியில் வீரவசனம் பேசியே 2009 இற்குப் பின்னால் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றது தமிழ் தேசியக் கூட்டமைப்பு. இதையே தான் கடைசியாக இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் செய்தது. தற்போது, வெளிவந்துள்ள மேற்படி ஐ.நா அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ள கூட்டமைப்பு, அவ் அறிக்கையில் கூறியுள்ளது போல «ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றம்» போர்க்குற்றத்தை விசாரிப்பதையே சரியான வழிமுறை எனத் தெரிவிக்கிறது.

இதேவேளை, புலம்பெயர் புலிகளில் ஒரு பகுதியினரும் சிவாஜிலிங்கம், மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோஷ்டியும் முற்றுமுழுதான சர்வதேச விசாரணை அறிக்கையே தமக்கு வேண்டுமென அடம்பிடிக்கின்றனர். இவர்களுக்கு பதில் சொல்ல முயலும் கூட்டமைப்புப் பிரதிநிதிகளான சுமந்திரன் போன்றவர்கள்- கரகாட்டக்காரன் வாழைப்பழ கொமடியில் செந்தில் கூறுவது போல ”அதுதான் இது” என்று கூறுகின்றனர். குறிப்பாக சுமந்திரனும், சேனாதிராசாவும் தமிழ் ஊடகங்களுக்கு பேட்டி கொடுக்கையில், சர்வதேச விசாரணை நடந்து முடிந்து விட்டதாகவும் அந்த அறிக்கைதான் மேற்படி ஐ.நா அறிக்கை எனவும் கூறி வருகின்றனர்.

இது ஒரு புறமிருக்க, போர்க்காலத்தின் இறுதிக்கட்டத்தில் மஹிந்த லிபியாவுக்குப் போனதனால், முப்படைகளின் தளபதியாகக் கடமையாற்றிய தற்போதைய ஜனாதிபதி மைத்ரி «ஐ.நா அறிக்கையின் காரத்தைக் குறைத்து, தேசத்தை எனது அரசு காப்பாற்றியுள்ளது» என அறிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா அறிக்கையையும், அதன் பின்னணியில் நடைபெறும் வாதப் பிரதிவாதங்களையும் கவனிப்பவர்களுக்கு ஒரு விடையம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதாவது, இலங்கையின் ஆதிக்க சக்திகளாக இருந்துவரும் தமிழ்-சிங்கள அரசியல்வாதிகள் தொடர்ந்தும் இலங்கை மக்களை இனவாத அடிப்படையில் பிரித்து வைத்து, தமது வர்க்கநலனைக் காக்கும் அரசியலையே மேற்படி ஐ.நா அறிக்கையை முன்னிறுத்தி செய்து வருகின்றனர் என்பதாகும். ஏகாதிபத்திய நாடுகள் போர்தொடுப்பதற்கு «அனுமதிப்பத்திரம்» வழங்குவதும் அல்லது போர் நடக்கின்ற வேளைகளில் கள்ளத்தனமாக பின்வாங்கி மவுனித்து இருந்துவிட்டு பின்னர் அறிக்கைகள் மூலம் ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்கு விருந்து வைப்பதுமே ஐ.நா வினது செயற்பாடு என்பதே உலகம் முழுதும் நடந்தேறிய போர்களுக்குப் பின்னால் கிடைக்கும் ஆதாரம் ஆகும்.

மேலும், இனரீதியாக மக்கள் பிளவுபட்டுள்ள இலங்கையின் சமூக அமைப்பில் - ஐ.நா பரிந்துரை அமுலாக்கம் என்பது மக்களை இனரீதியாக தொடர்ந்து மோத வைக்கின்ற ஏகாதிபத்திய சதித்திட்டமேயாகும். இலங்கையில் இனரீதியாக மக்களைப் பிரித்து வைத்திருப்பதன் மூலம் தான் -இலங்கை மக்களை இலகுவாகச் சுரண்டுவதற்கு முன்னெடுக்கப்படும் நவதாராளமயப்படுத்தலை நடைமுறைப்படுத்த முடியும். ஒடுக்கப்படும் இலங்கை மக்களின் இனம், மதம் கடந்த இணைவானது ஏகாதிபத்திய நலன்களையும், அதன் உள்நாட்டுக் கைக்கூலிகளின் நலன்களுக்கும் எதிரான சாவுமணி என்பது வெளிப்படையான உண்மை. இந்நிலை ஏற்படாமல்- ஒடுக்கப்படும் மக்களின் இணைவு நடைபெறாமல் பார்த்துக் கொள்வதற்கான நரித்தனமான அறிக்கையே ஐ.நா அறிக்கையாகும்.

ஐ.நா போர்க்குற்ற பரிந்துரை அறிக்கையால் எந்தவிதத் தீர்வும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. போராலும், இனவாத அரசியலாலும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் பிரதிநிதித்துவதுடன், இலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றிணைவின் மூலம், உருவாக்கப்படும் மக்கள் தீர்ப்பாயத்தின் (People's Tribunal) மூலம் மட்டுமே, சரியான தீர்வையும் - நீதியான தீர்ப்பையும் பாதிக்கப்பட்ட மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

நிறைவாக, மக்கள் தமக்குள் ஐக்கியப்பட்டுக் கொடுக்கும் தண்டனையும் - தீர்வும் மட்டும் தான் மக்களுக்கானது. மற்றைய அனைத்தும் மக்களுக்கு எதிரானது.

# இன ஐக்கியத்தை முன்னிறுத்திய டென்மார்க் கலைவிழா

கலையை ரசிக்கத் தெரிந்த மனிதன் அது எந்த மொழியைச் சேர்ந்த கலை என்று அதனைக் குறுக்கிப் பார்ப்பது கிடையாது. அப்போது மனிதம் முதன்மை பெற்று, மனிதனை மனிதன் நேசிக்க வைக்கின்றது. சமவுரிமை இயக்கம் மனிதத்தன்மை ஊடாக மக்கள் தமக்குள் ஒன்றுபட்டு - தமது முரண்பாடுகளை தாமே தீர்க்கும் ஜனநாயகப் பண்பாட்டை முதன்மையாகக் கொண்டு இயங்குகின்றது. இதற்கு அமைய புதிய கலைவடிவங்களை அறிமுகம் செய்யவும் - படைக்கவும் முனைகின்றது. இதன் ஆரம்ப முயற்சிகளே சமவுரிமை இயக்கத்தினால் நடாத்தப்படும் கலைவிழாக்கள். காலாகாலமாக இலங்கையிலும் - புலம்பெயர் நாட்டிலும் இனவாதம் ஊட்டப்பட்ட சமூகத்தில் ”சிங்களவர் - தமிழர் - முஸ்லிம்கள் -மலையகத்தவர்” என்று பிரிந்து கிடக்கும் சமூகத்தில் நாம் வாழ்கின்றோம். சமவுரிமை இயக்கம் கலைகள் மூலம் மக்களை இணைக்கும் முயற்சி தான் “வசந்தத்தைத் தேடுகின்றோம்” என்கின்ற கலைவிழாவாகும்.

இவ்வருடம் “வசந்தத்தைத் தேடுகின்றோம்” கலைவிழா டென்மார்க் கோல்ஸ்ரபுரோ நகரில் நடைபெற்றது.

இக் கலைவிழாவில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் இருந்து அவதானத்துக்கு வந்த விடயங்கள், சமவுரிமை இயக்கத்தின் கலைப் பணியானது மக்கள் மத்தியில் இன ஐக்கியம், சமூகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதை உறுதிப்படுத்தியது.


புலம்பெயர் நாடுகளில் பிறந்த தமிழ்க் குழந்தைகளுக்கு - பெற்றோரால் சிங்களவர்கள் எம்மைப் போல் மனிதர்களல்ல, எமது எதிரி என்று ஊட்டப்பட்ட நஞ்சுகளை இந்த விழாவில் கலந்துகொண்ட குழந்தைகள் மத்தியில் தகர்த்தது. தமிழ் குழந்தைகள் தமிழைப் போல் - சிங்கள மொழிப் பாடல்களைப் பாடியதாகட்டும், அதன் மூலம் கலையை நெருக்கமாக ரசிக்கும் தமது விருப்பை வெளிப்படுத்தியதாகட்டும், தமிழ் - சிங்கள மொழி வேறுபாடு இன்றி - மொழி புரியாத சூழலிலும், ஒட்டுமொத்தமாக நிகழ்வுகளை கூர்ந்து அவதானித்தும் - தங்கள் நடத்தைகள் மூலம் அதைக் கொண்டாடியதாகட்டும்....சமூக மாற்றத்தின் முதற்படியை இந்த நிகழ்வு வெளிப்படுத்தி நின்றது.

ஐரோப்பிய சமவுரிமை இயக்கமும் - டென்மார்க் சமவுரிமை இயக்கமும் ஒன்றிணைந்து நடத்திய இந்தக் கலைவிழாவில், விழா மண்டபத்தை நிரப்பும் அளவிற்கு மக்கள் கலந்து கொண்டார்கள். சிங்கள - தமிழ் - டெனிஸ் மொழிகள் பேசக்கூடிய மக்கள், அரங்கில் இணைந்து ரசித்தனர்.

இப்படி மூன்று மொழி பேசக்கூடிய மக்கள் ஒன்றாக கூடியிருக்க, இத்தாலி - பிரான்ஸ் கலைஞர்களுடன் டென்மார்க் கலைஞர்களும் மேடையேற - சமவுரிமை இயக்கம் மக்களை இணைக்கும் பாலமாக கலையை மாற்றியது.

இந்தவகையில் டென்மார்க் மற்றும் கனடா சமவுரிமை இயக்கம் நடத்திய முந்தைய கலைவிழாக்களும் - ஐரோப்பிய சமவுரிமை இயக்கம் பாரிசைத் தொடர்ந்து டென்மார்க்கில் நடாத்திய தனது இந்த இரண்டாவது நிகழ்வும் - கலை மூலம் மக்கள் ஐக்கியத்தை நோக்கிய தமது பயணத்தில் முதல் காலடியை முன்வைத்திருக்கின்றனர்.

இந்த நோக்கில் விரைவில் இலங்கையில் சமவுரிமை இயக்கம் முன்னெடுக்கவுள்ள கலைவிழாக்களில், ஐரோப்பிய சமவுரிமை இயக்கமும் இணைந்து முன்னெடுக்க இருக்கின்றது. அதற்கான உங்களின் பங்களிப்பையும் - ஆதரவையும் சமவுரிமை இயக்கம் கோரி நிற்கின்றது.












**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

41- 32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய வசிக்கும் ஜீட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைவிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

படிப்பகம்